விக்ருதி ஞூ
ஸம்புடம் 10

ஸ்ரீ:

தை மீ
ஸஞ்சிகை 1

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும்

ப்ரசுரமாகும்

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]



ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர், M.A. B.L., சிரோமணி.

(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்

நெ. 2. ஆதியப்ப முதலி தெரு. புரசைவாக்கம்,

சென்னை—7.

OFFICE OF T
MADRA

JANUARY 1951
VOL. 10. NO. 1

ந்தா
0—0

தனிப்பிரதி விலை 0-4-0

ஸ்ரீ ராம கானாமுதம்

இது ஸ்திரீ புருஷர் உட்பட யாவரும் உணர்ந்து ஓதற்குறிய ஸ்ரீ ஸுந்தரகா
சைநூல். ஸ்ரீ வால்மீகி, கம்பர் முதலிய மஹாகவிகளின் கருத்துக்களையொட்டி எளிய இனிய சந்தப்பாக்களில் அநேக ராகங்களில் பாடுமாறு இந்நூல் இயற்றப்பட்டிருக்கிறது. இந்நூலில் பாலகாண்டம்முதல் கிஷ்கிந்தாகாண்டம் ஈறாக உள்ள கதைச்சுருக்கம் முதலில் ஹநுமான்வாயிலாகவும், பின்னர் ஹநுமான் ஸீதையைத் தேடி வெற்றியுடன் திரும்பும் ஸுந்தரகாண்டக்கதை 22 அத்யாயங்களிலும் கடைசியாக ராவணவதமும், இறுதியான 23-ம் அத்யாயத்தில் ஸ்ரீராம பட்டாபிஷேகமும், இவ்வாறு மங்களகரமான முடிவுடன் கதை அமைக்கப்பட்டுப் பூர்ணமான மனவெழுச்சியைத் தரவல்லதாயிருக்கிறது. சாதாரணத் தமி
றிவுள்ளவர்கள்கூட இதனைப் பாடி இன்புறலாம். இந்நூலுக்கு அலங்காரமாய் ஸ்ரீ ராம பட்டாபிஷேகப் படம் அட்டையில் கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. இந்நூலின் விலை பன்னிரண்டணா. தபால்சார்ஜ் வேறு.

இந்நூல் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ. K. சுதர்சனாசார்யர்
ரிடையர்ட் தமிழாசிரியர்
அவளூர் கிராமம்
களத்தூர் போஸ்ட்
(வயா) காவேரிப்பாக்கம் (N. A. D. T.)

விஷய ஸூசிகை

1	ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் —	2
2	ஸ்நாநம் —	6
3	உபயவேதாந்த ஐககண்ட்யம் —	9
4	பரமனை அறிந்த பக்தசிகாமணி —	12
5	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம் —	14
6	புயலும் பொறுமையும் —	16
7	பஞ்சாங்க ஸங்க்ரஹம் —	18
8	ஓர் ஸந்தேஹம் —	,,
9	ஆஸ்திக்யம் —	19
10	ஆண்டாள் —	23
11	அர்த்தோதய மஹோதய தத்வம் —	25
12	செய்திகள் —	
13	புஸ்தகவிமர்சம் —	
14	ஸம்பாதகரின் குறிப்புகள் —	

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } விக்ருதி ௵ தை ௴ { ஸஞ்சிகை 1

𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.]

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

(9-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

ராஜா—இதுதான் என் மனத்திலுமுள்ளது. இது பலிப்பது பரமாத்மாவால்தான் ஆக வேணும்.

ஸுமதி— [முன்னே கண் செலுத்தி] ஆர்ய புத்ரரே! இதோ நம் கண்முன் பூர்ண சந்த்ரன் உதித்தாற்போல குளிர்ந்த வெண் ப்ரகாசம் பரவுகிறதே!

ராஜா— ஸேநாபதியே! இதென்ன இந்த்ரஜாலம் போல் எதிர்பார்க்காமல், இன்னதென்று ஊஹிக்க முடியாமல் அமுதக்கடல் அலைப்பது போல வெண்சோதி வெள்ள மிடுகிறது போல் இருக்கிறதே!

வ்யவஸாயர்— நாரத பகவான் எழுந்தருளுகிறா ரென்பது திண்ணம். ச்வேத த்வீப தேவதைதானோ என்று நினைக்கும்படி இப்படி ஒரே ச்வேதமான ஒளிபரப்பு மற்றொருவருக்கு மிராது.

[திரைக்குள் பாடப்படுகிறது]

அதராஹித சாருவம்ஶநாலா:
மகுடாலம்பி மயூரபிஞ்ச்சமாலா: ।
ஹரிநீலஶிலாவிபங்கநீலா:
ப்ரதிபாஸ்ஸந்து மமாந்திமப்ரயாணே ॥

இது கோபால விம்சதியில் 12-வது ச்லோகம். அங்கிருந்து இதை இங்கே படிக்கிறார். 30-தடவை ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் இந்த நாடகம் ஆரம்பிக்கையில் முடிந்துவிட்டது. தம் மற்ற க்ரந்தங்களில் முன்பே பாடியதை அப்படியே மற்றொரு க்ரந்தத்திலும் படிப்பது மஹாகவிகளின் முறையே. கோபாலவிம்சதியை நாரதர் வீணையில் பாடவேணு மென்ற ஆசை; அவர் வீணையில் பாடத்தக்கதே கோபாலவிம்சதி. ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்தில் இதன் பொருளை விஸ்தரித்துள்ளோம். இங்கே சுருங்கச் சொல்வோம். மீமாம்ஸையில் 12-வது அத்யாயம் 'ப்ரஸங்கம்' என்பது. 'அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்' என்ற க்ரமத்தில் பின்னால் 'ப்ரயாணகாலே மநஸாசலேந' என்று பகவான் கீதையில் பாடுகிறபடி கடைசி ப்ரயாணத்தில் கண்ணன் விஷயமாக இப்படி இப்படி ப்ரதிபைகள் - அநுபவ நினைவுகள் என்மனத்தில்வரவேணுமென்கிறார்.

இங்கே 'ப்ரஸங்கம்' என்னும் விமர்சஸந்தியின் அங்கம் அமைக்கப்பட்டதென்றும், 'ஶ்ராவ்யவிஶேஷகீர்த்தநம் ப்ரஸங்க:' என்று அதற்கு தசரூபக லக்ஷண மென்றும் ப்ரபாவிலாஸ உரை காட்டிற்று. (1) திருப்பவளத்திலே புல்லாங்குழல் உள்ளதாகவும் பின்னால் 16-வது ச்லோகத்தில், 'ஶ்யாமஶ்ரீவிலாஸாயாம் ஸுஸ்வாநு வம்ஶநாலை:' என்று பாடப்போகிறார். திருப்பவளத்திலிருந்து 'அஹம் த்வா மோக்ஷயிஷ்யாமி' என்ற அபயதாந வாக்கு உதிக்கவேணும். வேணுநாதம் என் காதில் கர்ண மந்த்ரம்போல் இனிக்கவேணும். வேணுவோடு கூடிய அதரத்தோடு திருமுகமண்டல ஸேவை. 'பவளச் செவ்வாய னென்கோ'. (2) மயில்தோகை மாலையால் அலங்க்ருதமான திருமுடிஸேவை. (3) அப்பொழுதுதான் பிளக்கப்பட்ட இந்த்ரநீலக் கல்போன்ற நீலப் பளபளப்பு திருமேனி. ச்யாமா ராகத்தில் ஸ்ரீஸதாசிவ ப்ரஹ்மம் 'ப்ரஹ்மணி மாநஸ ஸஞ்சர ரே' என்ற கீர்த்தனையில் மதசிகி பிஞ்சத்தால் அலங்கரிக்கப்பட்ட சிகையை யநுபவித்தார். சிகிபிஞ்சத்தால் சிகாலங்காரம். ச்யாமஸுந்தரரை அநுபவிக்க ச்யாமா ராகம். ச்யாமா — நீலா. அந்திமில் நினைவு இங்கே வர்ணிக்கப்படுவது போல கண்ணன் திருமேனி மயமா யிருக்க வேணும். 'அஞ்சன வண்ணனென்கோ', மணிவண்ண', 'தூமணி வண்ணனெம்மான்

தன்னை', 'கொந்தார் காயாவின்கொழுமலர் திருநிறத்து'.

ராஜா—இதென்ன நாரதமஹாமுனிவருடைய பரமபுருஷாநுபவ ரூபமான வீணாநாதம் கலந்த இன்பமய உல்லாஸ கானம். விபஞ்சீ நாதம் போன்றது வைதர்பீ ரீதி. 'விபஞ்சீ மதுரஸ்வநா' என்று அதன் லக்ஷணம்.

தேவீ—(தோழியினிடம்) தேவர்ஷியோடு ஸல்லாபம் செய்யும்போது நான் கொஞ்சம் ஒதுங்கியிருக்கிறேன்.

நாரதர்—[ப்ரவேசிக்கையில் தூரத்திலிருந்து] 'ஆவாவென் றலைநீர்க் கடலு ளழுந்தும் நாவாய் போல்' என்றபடி ஸம்ஸார ஸாகரத்தில் தவிக்கும் ஜீவனை அத்யாத்ம ஜ்ஞாந மெனும் படகேற்றி, புறச் சமயராகிய திமிங்கிலம் முதலிய அபாய ஜந்துக்களில்லாத நல்வழியால் சென்று ஸமாதி யெனும் கரையின் ஸமீபத்திற்குச் சேர்த்து மிச்ச கார்யத்திலும் த்வரையோடு நிற்கிறார் விவேக ராஜா.

திதிக்ஷுர்த்³வந்த்³வாநாம் த்³ருதசித்தோ யத்³ருச்சோ²-
பநததுஷ்ட:
பரித்யஜ்ய த்யாகீ ப்⁴ரமர இவ ஸார-
க்³ரஹருசி: ।
க்ருதஜ்ஞ: ப்ராப்தவ்யே நியதரதிரே-
காந்தரஸிகோ
முமுக்ஷுஸ்ஸந்த⁴த்தே முநிரநிப்⁴ருதம்
ப்³ரஹ்மணி மந: ॥

'த்³வந்த்³வங்கள்' என்பது 'ஸுக² து:க²ம், 'சீதோஷ்ணம்' முதலிய மோக்ஷமார்க்க விரோதிகளான இரட்டைகள். அவற்றைப் பொறுத்துக் கொள்ளவேணும். கீதைத் தொடக்கத்திலேயே பகவான், சீதோஷ்ண ஸுக² துக்கங்களைத் தரும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைத் திதிக்ஷை செய்ய வேணும் என்று உபதேசித்ததை 'திதிக்ஷு:' என்பதால் ஸூசிக்கிறார். த்³ருதசித்த: - பக்தி ரஸத்திலுருகிய நெஞ்சராய். யத்³ருச்சோ²பநததுஷ்ட: - தன் யத்நமில்லாமல் யத்ருச்சையாகத் தானாகக் கிடைப்பதை மட்டும் உண்டு. அஜகர வ்ருத்தாந்தத்தை நினைக்கிறார். பரித்யஜ்ய த்யாகீ - நிஷித்தங்களையெல்லாம் தள்ளி. 'ஸர்வத⁴ர்மாந் பரித்யஜ்ய' என்று இருப்பதால் தர்மங்களையே விட்டுவிடக் கூடாது. அவற்றின் பயன்களில் காமம் மோக்ஷ விரோதியானதால், பயனில் ஆசையைத் தள்ளி. ப்⁴ரமர இவ ஸாரக்³ரஹருசி: - ஸார நிஷ்கர்ஷாதிகாரத்தில் கூறியபடி தேனீபோல் எல்லா வேதாந்த வாக்ய குஸுமங்களிலிருந்து ஸாரமான தேனை க்ரஹிப்பவனாய்.

'யாவாநர்த² உத³பாநே
ஸர்வத: ஸம்ப்லுதோத³கே ।
தாவாந் ஸர்வேஷு வேதே³ஷு
ப்³ராஹ்மணஸ்ய விஜாநத: ॥'

என்று கீதை முதலிலேயே உபதேசித்ததையும் நினைக்கிறார். க்ருதஜ்ஞ: ப்ராப்தவ்யே - கிடைத்தது பாக்ய மென்று நன்றியோடு. நியதரதி: - நித்யமும் ஹ்ருஷ்டனாய். ஏகாந்தரஸிக: - 'விவிக்ததே³ஶஸேவித்வம்' என்றபடி ஏகாந்த நிலையில் ப்ரியனாய். முமுக்ஷு: - ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கப்பட வேணுமென்னும் தீவ்ர ஆசையுடைய முமுக்ஷு. அநிப்⁴ருதம் - ஓயாமல். ப்³ரஹ்மணி மந: ஸந்த⁴த்தே - ப்ரஹ்மத்தினிடமே மனத்தை ப்ரீதியுடன் வைத்திருப்பான்.

ராஜா— [வேகமாய் நெருங்கி] பகவானே! இப்பொழுதுதான் நாங்கள் தந்யர்கள்.

அயமஹமபி⁴வாத³யே ப⁴வந்தம்
விவித⁴ஸுராஸுரவந்த³நீய ।
விதி⁴வஶவஶிதமோஹவேக³:
விநயவிஶிஷ்டதயா ஸுதீவ்ரவேக³: ॥

பாக்ய வசத்தால் மோஹ வேகை யடங்கப் பெற்ற யானெனும் இவ்விவேகன் ஸகல ஸுராஸுரக் கூட்டத்தாலும் நமஸ்கரிக்கப்படும் தேவனே! உம்மை மிக்க விநயத்தோடு அபிவாதனம் செய்கிறான். 'அஹம்' என்னும் 'இவன்' என்பதால் தன்னில் அஹந்தையை விலக்குகிறான். 'அயமஹம்போ⁴:' என்றபடி. 'தே³வாநாம் தா³நவாநாம் ச ஸாமாந்யமதி⁴தை³வதம்' என்று பகவானை வர்ணிப்பர். நாரதரை ஸுரரும் அஸுரரும் பணிவர்.

நாரதர் போன்ற ப்ரம்ஹநிஷ்டரை 'தமேவ தேவா பலிமாவஹந்தி' என்ற உபநிஷத்துப்படி தேவர்கள் பூஜிப்பர். நாரதருக்கு அஸுரரும் பூஜிப்பது அஸாதாரணமென்று ரஸம். ஹிரண்ய ராவண கம்ஸாதிகளுக்கும் இவர் பூஜ்யர். அப்படியே மஹாமோஹனுக்கும். அவனையும் மோஹிப்பிப்பது இவர் கானமும் ச்வேதாத்வைதச்சோதியழகும்.

நாரதர்— ஆயுஷ்மந்! விவேகனாகிய நீ தீர்க்காயுஸ்ஸாக இருக்கவேணும். விவேகம் அல்பாயுஸ்ஸாயிருக்கக் கூடாது. உன் மனோரதம் தடைபட்டாமல் நிர்விக்நமாய் நீ முமுக்ஷு ஜீவனை 'விஷ்ணு-பரமபதம்,' என்னும் முடிவாய் அடையவேண்டிய ஸ்திதியான பரமாத்ம ஸ்வரூபத்தில் சேர்த்து நிலைநிறுத்தவேணும். [இங்கே, 'ஸோத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்' 'ஸோஸ்ய துர்தர்ஷம் கூடமநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம்' என்று கடவல்லீ வர்ணித்த 'உள் யோகத்தை' (ப்ரத்யக்தர்சந யோகத்தை) நாரதர் நினைக்கிறார். இங்கே இவர் மேலே கூறும் ச்லோகத்தால் இது ஸ்பஷ்டம்.] ஸுமதியோடு கூடிய விவேகர் ஸத்புத்தியாகிய ஸாரதி மஹாமோஹனைத் தூரத் தள்ளி யெறிந்ததால் நீர் கலியுக ப்ரபாவத்தை ஜயித்தீர். ஆயினும் சேஷத்தையும் பூர்த்தி செய்யவேணும்.

வீரஸ்ரீர்திவேவ விக்ரமஹவ ஹோஹாவஹுஜநிஷ்பஹுஜவ
ஸ்ரீயாஸ்தக்ருதாய த்தா ஸவதீ ந க்ஷதம்
ப்ரேக்ஷதே। சக்ஷுஷ்ச ஸூநர ஊ தத்ப்ரண
யிநீ ஹ்ருஷீகஸ்யா வாஸ்த்ரா தாஜ்ஞே ஸ்ருஷ்டே
தந்த்ரஹ்ருஷ்டஜநவம் த்ருத்ராவயம் ஸேவயிதும்॥

இங்கே முதல் பாதியில், மஹாமோஹனோடு போரில் வீர ரஸப் பூர்த்தி யநுபவத்தைக் காட்டுகிறது. வீர ரஸம் பூர்ணமாயிற்று. இப்பொழுது அத்புத ரஸத்தில் இறங்கி அதைப் பூர்ணமாய் அநுபவிக்கவேணும். ஸர்வ ப்ரத்யக்ஷான ஸர்வத்திற்கு முள்ளான பரமாத்மாதான் எல்லாவற்றிலும் ஆச்சர்யமானது. 'தத்ஸூதம்' 'ஆச்சர்யவத் ப்ருதம்' ரூபவேசாஹநு ஸூஹ்ஸ ஸஹாயாம் ந ருபம் ந தாந்தாஷ்டு' என்று அத்யாச்சர்யமாக வர்ணிக்கப்பட்ட வஸ்துவை தேவகீ கர்ப்பத்திலிருந்தும், ஹிரண்யன் ஸபைக்கம்பத்திலிருந்தும் வெளிவருகையில் நேரில் அநுபவிக்கும் ரஸம். நாரதரே பாடின பின் ச்லோகத்தை சுகர் படித்தார். ஹரிவம்சம் ஆச்சர்யோபாக்யாநத்தில் க்ருஷ்ணனே ஆச்சர்யமென்று நாரதர் அறுதியிட்டார். வீரலக்ஷ்மி உம்முடைய அதிசயமான தோள் பராக்ரமத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்து மஹாமோஹனை நீர் துரத்தி விரட்டியடித்ததை மெச்சி உம்மைத் தவிர மற்றொருவரையும் பார்க்காமல் உம்மிடமே கண்ணாயிருக்கிறாள். போர் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருந்த அவள் புத்தி இப்போது உம்மிடமே ஸ்திரமாய் நிலை நிற்கிறது. அத்புதத்தைப் பார்ப்பதில் யாவருக்கும் ரஸமிருக்கும். தமக்கு வெளியே 'அத்புதத்தை' ஜனங்கள் தேடுவர். 'நிதி' என்பது அத்புதமே. நிதி உள்ளே புதைந்திருக்குமேயல்லாது வெளியிலிராது. உள்ளே போய்தான் நிதியைக் காணலாம். இங்கே உள்ளேயுள்ள நிதி 'ஸத்ருஜ்ஞாநாநந்தம் ப்ரஹ்ம யோ வேத நிஹிதம் குஹாயாம்' என்னும் அநந்தமான நிதியென்பதை 'ஸ்ருஜ்ஞாவயம் ஸேவயிதும்' என்பதால் நினைக்கிறார். கண்ணைப் ப்ராக்கான வெளிப் பார்வையிலிருந்து ஆவ்ருத்த சக்ஷுஸ்ஸாக உள்ளே திருப்பி உள்ளுள்ள அநந்தனை ஸ்வாமியிடம் செலுத்தவேணும். அதில்தான் பூர்ணமான அத்புத ரஸாநந்தம் ஸித்திக்கும். தன்னைப் பார்ப்பார் இல்லையே என்று அது எங்கியுள்ளது. உள்ளேயே, எல்லாவற்றிலும் உள்ளுள்ளும் வீற்றிருந்து, எப்பொழுது உள்ளே வந்து பார்ப்பரோ என்று காத்துக்கொண்டேயிருக்கிறது. 'க்ஷுத்ஸு திஷ்டந், பச்சாத் நமேஷ'. ஜீவனுக்குள் நின்றுகொண்டு அவன் பார்க்கவேண்டுமென்றே, ('நிவாஸ்யக்ஷாய' என்று ஸூத்ரகாரர் கூறியபடி) காத்துக்கொண்டிருக்கிறது. அவஸர ப்ரதீக்ஷனாய் என்று பூர்வாசார்யர்கள் காட்டிய ரஸமிது. 'அத்ருஷ்டம் த்ருஷ்டம்' என்று ப்ரக்ருத அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில், 'நீ பார்க்கவே மாட்டேனென்று த்ரஷ்டனைக் கண்ணெடுத்து

பார்க்காம லிருந்தாலும் அது உன்னைப் பார்த்துக்கொண்டே யிருக்கிறது என்று ச்ருதி விளக்கும் ரஸம். 'நிவாய்யகுவாய, என்று ஸூத்ரகாரரும் 'உன்னால் பார்க்கப்படுவதற்காக' என்று ஹ்ருதய குஹையி லுள்ள அந்தர்யாமியைப் பற்றி விளக்கிய ரஸம். 'அநந்ய த்ருஷ்டம்' என்பதினால் இது ஓர் ரஸப்பொருள். 'அநந்யராய்' ஏகாச்ராராய் பரம ஏகாந்தியாய் இருந்தால்தான் பார்க்க முடியு மென்றும் பொருள். அநந்யரால் மட்டும் த்ருஷ்டம். மற்ற நிதிகளில் தங்கக் கனி முதலியதில் எத்தனையோ அழுக்கு ஒட்டி யிருக்கும். இது அழுக்கே ஒட்டாத அநக நிதி.

ஸம்க்ராம ஸமயேந ஸம்ஸாரே வாதிதா-
ஸ்வயா। காமக்ரோதாதயோ வீரா: ஸ்வர்க
ஸ்த்ரீ ஸ்வீகாரம் வ்ரஜா:॥

காமன், ஆசை, முதலிய மஹாமோஹ படர்கள் வீரப் போரில் மடிந்தவ ராகையால் அவர்கள் வீர ஸ்வர்க்க மடையவேணுமே என்று கேள்வி வரும். காமன் ஒரு ஸுந்தர ஸ்த்ரீ இல்லாமல் எப்படி இருப்பன்? காமன் மோஹன் முதலியவரை ஸ்வர்க்கத்தில் அப்ஸரஸ் ஸ்த்ரீகள் தாங்களே ஸ்வயம்வரமாக வரித்து மாலை யிடுகிறார்கள். ரதிபதி காமனே ஸாக்ஷாத்தாகப் பதியாகக் கிடைத்தால் அப்ஸரஸ்ஸுகள் விடுவரோ? 'இங்கே வீர ச்ருங்கார ரஸம்' என்று ப்ரபா விலாஸம்.

மேலும்

தத்வம் ப்ராய ஜநகே தவாஹவே
மோஹவீர விஜயேந மோஹிதா:।
சுப்ர விஷ ஸம்ரா: வ்ருத்தாத்ய வாதா:
ஸைந்ய கோச ஸம வாபவாதய:॥

இந்த விவேக மஹாமோஹ யுத்தத்தில் ஸந்தோஷம், சோகம், பயம் முதலிய மநோவ்ருத்திகள் மஹாமோஹன் ஜயிக்கப்படுவதைப் பார்த்து யுத்தத்தில் அவன் கட்சியில் சேர்ந்து நுழையாமலேயே ஓடிப்போய்விட்டார்கள். இதற்குக் காரணம் முன் பாதியில் காட்டப்படுகிறது. விவேகர் செய்யும் போர் உண்மையை (தத்வத்தை) உள்ளபடி தெளிவிப்பதற்கே. காமம், லோபம், க்ரோதம், அஸூயை முதலியவற்றில் ஸந்தோஷப்படுவது தத்வ அறிவுக்கு விரோதம். காம க்ரோதலோபாதிகளை ஜயித்து ஆசையில்லாமை. க்ஷமை முதலியதில் ஸந்தோஷம் வஸிப்பது நல்லது. காம க்ரோதலோபாதிகளில் பயம் இருப்பது நல்லது. தோஷங்களில் புத்தி செல்வதில் சோகம் ஏற்படுவது நல்லது. பக்தி முதலியதில் சபலம் இருப்பது நல்லது. இப்படி நாமிருந்து நல்ல பேறை யடையு மிடங்களான விஷயங்களைத் தேடுவோம் என்று இவை ஓடிப்போய்விட்டன. இப்பொழுது விவேகருக்கு அநுகூலம் செய்ய ஓடி வந்துவிடும். எந்தக் கக்ஷி ஜயிக்கிறதென்று பார்த்திருந்து போரில் நுழையாமலிருந்து ஜயித்த கக்ஷிக்கு அநுகூலமாகச் சேருகின்றன. இது பயாநக ரஸம் என்று ப்ரபாவளி.

ஒன்று இங்கே ஆலோசிக்கவேண்டியதுண்டு; அதாவது:—

கால சக்ரம் பொல்லாதது. 'பூட்டைக் குண்டிகைபோல ஏறுவ திழிவதாக தூமாதி மார்க்கத்திலே பரிப்ரமித்ததை' நிகமநாதிகாரத்தில் வர்ணித்தபடி இங்கே 'க்ஷேமாரோஹாவரோஹ ஸ்வவடீயந்த்ர தந்த்ர ஸ்வதந்த்ர:' என்று கால சக்ரத்தை வர்ணிப்பது. 'கர்மாவித்யாதி சக்ரம்', 'கால சக்ரம்', இவை பெரும் சுழல்கள். ஆவர்த்தம் என்பது சுழல். அடுத்த ச்லோகத்தில் இந்த சுழல்களைக் குறிக்கிறார். 'பூட்டைக் குண்டிகை' என்பது ஏற்ற மரத்தில் கட்டிய ஏற்றச்சால். கர்ம பாசக் கயிறால் மேலும் கீழும் இழுக்கப்படுவது.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

ஸ்நாநம்

[ஸ்ரீ. உப. -அத்தி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

நமக்கு நித்யங்களாக விதிக்கப்பட்ட கர்மாக்களில் ஸ்நாநமும் ஒன்று.

ஸ்நாநமென்றால்

'காயசுத்த்யர்த்தம் காலவிசேஷே ஜலாதிகரணகை: சாஸ்த்ரபோதித: வ்யாபாரவிசேஷ:'
[சரீரசுத்தியின் பொருட்டு சாஸ்த்ரங்களில் சொல்லியபடி ஜலம் முதலிய கரணங்களால் ஒரு ஸமயத்தில் செய்யக்கூடிய கார்ய விசேஷம்.]

ஸ்நாநம் செய்வதாலுண்டாகும் பலன்

'ஸ்நாநம் ப்ரதாநம் ஸத்தாநாம்
ஸத்வஸம்சுத்திவர்த்தநம் ।
மந: ப்ரஸாதஜநநம்
ரூபஸௌபாக்யவர்த்தநம் ॥
சோகது:ஸ்வப்நசமநம் ஸ்நாநம்
மோக்ஷதம் ஜ்ஞாநதம் ததா ।
ஸ்நாநமேவ க்ரியாஸ்ஸர்வா:
ச்ருதிஸ்ம்ருத்யுதிதா ந்ருணாம் ।
தஸ்மாத் ஸ்நாநம் நிஷேவேத
ஸ்ரீபுஷ்ட்யாரோக்யவர்த்தநம் ॥'

[கர்மாக்களுள் ஸ்நாநம் முக்யமானது. சுத்தியையுண்டுபண்ணக் கூடியது; மனத்திற்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணக்கூடியது; அழகை வ்ருத்தி செய்யக்கூடியது; கஷ்டத்தையும் கெட்ட ஸ்வப்நத்தையும் போக்கடிக்கக் கூடியது; மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது; எல்லா கர்மாக்களையும் ஸ்நாநம் செய்த பிறகு தான் பண்ணவேண்டுமென்று ச்ருதி ஸ்ம்ருதிகளால் தெரிவதாலும் ஸ்நாநத்தை அவச்யம் செய்யவேண்டும். ஸ்நாநம் செய்வதால் சரீரத்திற்கு ஆரோக்யமுண்டாகிறது.] என்று சாண்டில்ய ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்நாநம் செய்யவேண்டிய காலத்தையும், அதன் பலத்தையும் ஸத்யவ்ரதர்

'உஷஸ்யுஷஸி யத்ஸ்நாநம்
ஸந்த்யாயாமுதிதே ரவௌ ।
ப்ராஜாபத்யேந தத்துல்யம்
மஹாபாதகநாசநம் ॥'

என்று சொல்லியிருக்கிறார். அதாவது:— ப்ரதி தினமும் அருணோதய காலத்தில் செய்யக் கூடியது, அல்லது ஸூர்யோதயமான பிறகு செய்கிறதுமான ஸ்நாநமானது ப்ராஜாபத்ய க்ருச்ரத்துக்கு ஸமமானது. மஹாபாதகத்தை போக்கடிக்கக்கூடியது.

'அகம்யாகமநாச்சைவ
பாபேப்ய: ப்ரதிக்ரஹாத் ।
ரஹஸ்யாசரிதாச்சைவ பாபாத்
முச்யேத ஸ்நாநவாந் ॥'

[ஸ்நாநம் செய்வதால், செல்லக்கூடாத விடத்துக்குச் செல்வதால் உண்டாகக்கூடிய பாபத்திலிருந்தும், பாபிகளிடமிருந்துப்ரதிக்ரஹம் வாங்கியதால் உண்டாகும் பாபத்திலிருந்தும், தனிமையில் செய்ததுமான பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான்] என்று யோகயாஜ்ஞ்யவல்க்யர் வசநமிருப்பதால், சில பாபங்கள் ஸ்நாநம் செய்வதால் போகின்றது என்று தெரிகின்றது.

ஸகல கர்மாக்களுக்கும் ப்ரதாநமான ஸ்நாநமானது இருவிதம்.

'ஸ்நாநந்து த்விவிதம் ப்ரோக்தம்
கௌணமுக்யப்ரபேதத: ।'

[ஸ்நாநம் முக்யமென்றும், கௌணமென்றும் இருவகைப்பட்டது] என்று சங்கஸ்ம்ருதியிலுள்ளது.

மேலும், அவ்விரண்டில் வாருண ஸ்நாநமென்பது முக்யமெனப்படும். முக்ய ஸ்நாநமான வாருண ஸ்நாநமானது ஆறு வகைப்பட்டது. அதாவது:— நித்யம், நைமித்திகம், காம்யம், க்ரியாங்கம், மலாபகர்ஷணம், க்ரியா ஸ்நாநம் என்பதாக.

'தயோஸ்து வாருணம் முக்யம்
தத்புந: ஷட்விதம் பவேத் ।'

'நித்யம் நைமித்திகம் காம்யம்
க்ரியாங்கம் மலகர்ஷணம் ।
க்ரியாஸ்நானம் ததா ஷஷ்டம்
ஷோடா ஸ்நானம் ப்ரகீர்த்திதம் ॥'

என்றுள்ளன.

'ஶௌசேஷ்டணே தேவாதி தர்ப்பணாதி ஸமாப்திதஃ ।
ஸ்நானம் வாருணமேவாதஃ'

என்று வாருண ஸ்நாந க்ரமம் ஆஹ்நிகத்தில் படிக்கப்பட்டிருக்கிறது.

'அஸ்நாதஸ்து புமாந்நார்ஹோ
ஜபாக்நிஹவநாதிஷு ।
ப்ராதஸ்நானம் ததர்த்தந்து
நித்யஸ்நானம் ப்ரகீர்த்திதம் ॥'

[ஜபம், ஔபாஸநம் முதலியவைகள் ப்ராதஸ்நாநம் செய்யாமல் செய்யக்கூடாததாகையால் ப்ராதக்காலத்தில் செய்யக்கூடிய ஸ்நாநமானது நித்ய ஸ்நாநமென்று சொல்லப்பட்டது.]

'ஸ்ப்ருஷ்டஸ்யாந்த்ய ஶ்வ ஶூத்ராத்யைஃ
ஸ்நானம் நைமித்திகம் பவேத் ।'

[சண்டாளன், நாய், சூத்ரன் முதலானவர்களால் தீண்டப்பட்டு செய்யும் ஸ்நாநமானது நைமித்திக ஸ்நாந மெனப்படும்.]

'புஷ்யஸ்நானாதிகம் காம்யம்
நிஷ்காமஸ்ய ந தத்பவேத் ।'

[புஷ்யஸ்நாநாதிகள் காம்ய மெனப்படும். ப்ரபந்நர்களுக்கு காம்ய ஸ்நாநம் கிடையாது.]

'தைலாமலகபிஷ்டாத்யைஃ மலாபஹரணம்
பவேத் ।'

[நல்லெண்ணெய், நெல்லிக்காயின் தூள் முதலியவைகளால் செய்யப்படும் ஸ்நாநத்திற்கு மலாபகர்ஷணம் என்று பெயர்.]

'ஸ்நானம் கங்காதி தீர்த்தேஷு
க்ரியாஸ்நானமுதாஹ்ருதம் ।
ஜபஹோமாத்யநுஷ்டானம் யச்ச
தத் க்ரியாங்கமுதாஹ்ருதம் ॥''

[கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் செய்யும் ஸ்நாநத்திற்கு க்ரியாஸ்நாந மென்று பெயர். ஜபம், ஔபாஸநாதி கர்மாங்கமாக செய்யப்படும் ஸ்நாநத்திற்கு க்ரியாங்கம் என்று பெயர்.]

இந்த ஆறுவித ஸ்நாநங்களில் நித்ய ஸ்நாநத்திற்குத்தான் வாருணஸ்நாநமென்று ப்ரஸித்தி.

கௌண ஸ்நாநமும் ஆறுவகைப்படும்.

'திவ்யம் வாயவ்யமாக்நேயம்
ப்ராஹ்மம் ஸாரஸ்வதம் ததா ।
மாநஸஞ்சேதி விஜ்ஞேயம்
கௌணம் ஸ்நானந்து ஷட்விதம் ॥'

[திவ்யம், வாயவ்யம், ஆக்நேயம், ப்ராஹ்மம் ஸாரஸ்வதம், மாநஸம் என்று கௌணஸ்நாநம் ஆறுவகைப்படும்] என்று கார்க்யர் கூறுகிறார்.

பாத்மபுராணத்தில்

'மாந்த்ரம் பௌமம் ததாऽऽக்நேயம்
வாயவ்யம் திவ்யமேவ ச ।
வாருணம் மாநஸஞ்சேதி
ஸ்நானம் ஸப்தவிதம் பவேத் ॥'

[மந்த்ரம், பௌமம், ஆக்நேயம், வாயவ்யம், திவ்யம், வாருணம், மாநஸம் என்றும் ஸ்நாநம் ஏழுவகைப்படும்] என்று முக்ய, கௌண விபாகமன்னியிலுள்ளது. ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அநுக்ரஹித்திருப்பது மிதுவேதான்.

'ஆபோஹிஷ்டாதிபிர்மாந்த்ரம்
ம்ருதாலம்பஸ்து பார்த்திவம் ।
ஆக்நேயம் பஸ்மநா ஸ்நானம்
வாயவ்யம் கோரஜஸ்ஸ்ம்ருதம் ।
யத்து ஸாதப வர்ஷேண
திவ்யம் ஸ்நானம் தது(ச்ய)தே ।
வாருணஞ்சாவகாஹஸ்து
மாநஸம் விஷ்ணுசிந்தநம் ॥'

ஆபோஹிஷ்டா’ முதலிய மந்த்ரங்களால் '[illegible]’ என்கிற ச்லோகத்தில் சொல்லியபடி ப்ரோக்ஷித்துக்கொள்வது மந்த்ர ஸ்நாநமெனப்படும். ஊர்த்வபுண்ட்ர தாரணத்திற்கு பார்த்திவ ஸ்நாந மென்றும், பஸ்மாவை பூசிக்கொள்வது ஆக்நேய மென்றும், (இந்த ஸ்நாநமானது பசுபதி மதஸ்தர்கள் விஷயம் என்று ஸ்ம்ருதி ரத்நாகரத்தில் உள்ளது) பசுவின் குளம்பிலிருந்து உண்டாகும் புழுதிகளை பூசிக் கொள்வது வாயவ்ய மென்றும், வெய்யிலுடன் கூடிய

மழையில் ஸ்நாநம் செய்வது திவ்யமென்றும், அகமர்ஷண ஸூக்தங்களைச் சொல்லி செய்யும் ஸ்நாநம் வாருணமென்றும், 'கல்பிதம்' என்று ஆஹ்நிகத்தில் சொல்லப்பட்ட ச்லோகங்களைச் சொல்லி விஷ்ணுவை சிந்தநம் செய்வது மாநஸமென்றும் எழுவகை ஸ்நாநத்தின் ப்ரகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸச்சரித்ர ஸுதாநிதியில் காயத்ரம், காபிலம் என்று இரண்டு ஸ்நாநங்கள் அதிகப்படியாக சொல்லப்பட்டிருக்கிறது. அவை செய்யும்விதம்.

'𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌦𑌶𑌵𑌾𑌰𑌾𑌭𑌿
𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑍇𑌨𑌾𑌮𑍍𑌭𑌸𑌾 𑌶𑌿𑌰𑌃 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 𑌤𑌦𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌂
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥
𑌪𑌾𑌦𑌾𑌦𑌿 𑌨𑌾𑌭𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂
𑌸𑌂𑌲𑌿𑌪𑍍𑌯 𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌮𑍃𑌜𑍍𑌜𑌲𑍈𑌃 ।
𑌵𑌾𑌸𑌸𑌾𑌙𑍍𑌗𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌣𑌿
𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌕𑌾𑌪𑌿𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥'

[பத்து தடவை காயத்ரியை ஜலத்தில் ஜபித்து அதை ப்ரோக்ஷித்துக்கொள்வது காயத்ரமெனப்படும். பாதம் முதற்கொண்டு நாபி வரையில் மண்ணுடன் கூடிய ஜலத்தினால் நன்றாக அலம்பிக்கொண்டு, எல்லா அவயவங்களையும் ஈரத்துணியால் துடைத்துக்கொள்வது காபிலமெனப்படும்] இவைகள் உடம்பு ஸரியில்லாதவர்கள் செய்யவேண்டியவை.

'𑌯𑌥𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑌾𑌦𑌿 ஸ்நாநங்கள் துல்ய பலங்களான ஸ்நாந பேதங்களாகும் போலே' என்று மூல ப்ரமாணங்களுக்கு அநுகுணமாக நம் தூப்புல்பிள்ளை அநுக்ரஹித்திருப்பதால் தன் அதிகாராநுகுணமாக எந்த ஸ்நாநம் செய்தாலும் ஸ்நாந பலன் பூர்ணமாக கிடைக்குமென்பதில் ஸந்தேஹமில்லை.

'𑌨𑌦𑍀𑌨𑌦𑌤𑌟𑌾𑌕𑍇𑌷𑍁
𑌦𑍇𑌵𑌖𑌾𑌤𑌜𑌲𑍇𑌷𑍁 𑌚 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍍𑌨𑌾𑌯𑍀𑌤
𑌗𑌿𑌰𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌰𑌵𑌣𑍇𑌷𑍁 𑌚 ॥'

[நதி, நதம், குளம், புஷ்கரிணி, நீர்வீழ்ச்சி முதலியவைகளில் விஹித கர்மாக்களின்பொருட்டு ஸ்நாநம் செய்யுங்கள்] என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் ஸ்நாநம் செய்யக்கூடிய ஜலமானது சொல்லப்படுகிறது.

'𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌦𑍁𑌦𑌕𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌭𑍂𑌮𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌮𑍍 । 𑌨𑌾𑌦𑍇𑌯𑌂 𑌤𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌤𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌮𑍍 ॥
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌦𑍍𑌯𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌂
𑌤𑍋𑌯𑌂 𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌯𑌤𑍍𑌰 𑌸𑍍𑌨𑌾𑌨𑌵𑌤𑌾𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿
𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌪𑌾𑌵𑌨𑌂 ॥'

கிணற்றில் ஜலத்தை தூக்கி ஸ்நாநம் செய்வதைக் காட்டிலும் பூமியிலிருக்கும் ஜலம் உயர்ந்தது அதைவிட ஓடுகிற ஜலத்தில் ஸ்நாநம் செய்வது சிறந்தது; அதைக்காட்டிலும் நதீஸ்நாநம்; அதைவிட புண்யதீர்த்தங்கள்; அதிலும் புஷ்கரிணிகளின் ஜலம் மஹா பாதகத்தைப் போக்கக்கூடியது; அதைக் காட்டிலும் எவ்விடத்தில் பாகவதர்கள் தீர்த்தமாடுகிறார்களோ அந்த ஜலம் மிகவும் 'சிறந்தது, என்று ஜலத்தின் பெருமையானது சொல்லப்பட்டிருக்கிறது.

'𑌨 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌦𑍁𑌤𑍍𑌸𑌵𑍇 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇
𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌂 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯 𑌚 ।
𑌅𑌨𑍁𑌵𑍍𑌰𑌜𑍍𑌯 𑌸𑍁𑌹𑍃𑌦𑍍𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑍍
𑌅𑌰𑍍𑌚𑌯𑌿𑌤𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍍 ॥
𑌨 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌾𑌚𑌰𑍇𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾
𑌨𑌾𑌤𑍁𑌰𑍋 𑌨 𑌮𑌹𑌾𑌨𑌿𑌶𑌿 ।
𑌨 𑌵𑌾𑌸𑍋𑌭𑌿𑌃 𑌸𑌹𑌾𑌜𑌸𑍍𑌰𑌂
𑌨𑌾𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌜𑌲𑌾𑌶𑌯𑍇 ॥'

என்று ஸ்நாநம் செய்யக்கூடாத காலங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது :— உத்ஸவம் முடிந்தவுடனும், கல்யாணத்தைச்செய்து முடித்ததும், ஸ்நேஹிதன், பந்து இவர்களை வழியனுப்பியும், இஷ்டதேவதையைப் பூஜித்த பின்பும், உண்டவுடனும், நிசியிலும், தெரியாத தீர்த்தத்திலும் ஸ்நாநம் செய்யக்கூடாது என்று.

'𑌬𑌹𑍂𑌦𑌕𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇
𑌨 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌦𑌲𑍍𑌪𑌵𑌾𑌰𑌿𑌷𑍁'

ஸமீபத்தில் ஜல ஸம்ருத்தி யிருக்கும்போது அல்பமான ஜலமுள்ளவைகளில் ஸ்நாநம் செய்யக்கூடாதென்று நிஷேதமும் இருக்கிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

(9-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

அவஸ்திதி ஸூத்ரத்திற்கு அடுத்த ப்ரக்ருத்யதிகரணத்தில், ப்ரஹ்மம் தானுமுள்ளே ப்ரவேசித்து இருந்து எல்லா வஸ்துக்களோடும் கூட தம்மையும் அக்கார்யங்களில் சேர்ந்திருக்கும்படி யமைத்துக்கொண்டு, அக்கார்யங்களின் அவஸ்தைகளிலெல்லாம் கூட இருந்தாலும், அந்த அவஸ்தைகள் இவருடைய சரீரமான அப்பொருள்களின் மூலமாய் ஸத்வாரகமே யொழிய இவருக்கு அதனால் விகாரம் தோஷம் முதலியன ஏற்படுவதில்லை என்று விளக்கப்பட்டதை இங்கே கடைசி அடியினால் அழகாக விளக்குகிறார்.

ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரக்ருத்யதிகரணத்தில் 'அந்தந்த அவஸ்தைகளை யுடைய சேதநாசேதநங்களோடு அவற்றுக்குள் நியந்தாவாக இருப்பது ஆத்மத்வம். அது தான் பரமாத்மாவுக்குக் கார்யத்வம். விகாரங்களும், தோஷங்களும் சேதநாசேதநங்களுக்கு மட்டுமே. பரமாத்மா அவைகளால் தொடப்படுவதில்லை. இதைத்தான் ச்ருதி 'ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்' என்று கூறிற்று. விசித்ரநாநாவிதமான சிதசித்ரூபங்கள் மூலமாகக் கார்யமாகப் பரிணமிக்கும் ப்ரஹ்மம் விகார லேசமன்றியில் ஸத்யமாகவோ, திடராகவே, நிகில ஹேய ப்ரதிபடமாகவே, அபரிச்சிந்ந ஜ்ஞாநாநந்தமாக, ஏகரூபமாகவே என்றும், அந்த ஓரியல்வினராகவே நின்றது, என்று அங்கே ஸாதிக்கப்பட்டது இப்பாசுரத்தின் நான்காம் அடியின் விவரணமே என்பது ஸ்பஷ்டம்.

'எந்திடரே' என்று இவர் ஸ்வயம் விகார லேச மடையாமல் ஸர்வ பூதங்களுக்கும் காரணமான விசித்ர சக்தியை யுடைய கலக்கமற்ற உறுதியான காரணப் பொருளென்று தம்முடையதென்ற அபிமாநத்தோடு இங்கே ஆநந்தமாய்ப் பாடுவதும், ஸூத்ரகாரர் 'கர்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம், யத் பூதயோநிம் பரிபஶ்யந்தி தீரா:' என்று ச்ருதிகள் காரணத்திடரை ஆநந்தமாய்ப்பாடுவதை அனுபவித்து முதல் அத்யாயம் முடிகையில் ப்ரக்ருத்யதிகரணத்தின் முடிவில் 'யோநிஶ்ச ஹி கீயதே' என்று ச்ருதி கான ரஸத்தை அநுபவித்ததுபோல ஆழ்வாரும் இங்கே முதல் அத்யாய முடிவின் ஸூசநத்தில் 'எந்திடரே' என்று பாடுவது. 'யோநி' என்பது த்ருடமான உபாதாந காரணத்தைஸூசிப்பது. 'எந்திடரே' என்கிற ஏவகாரத்தால் இந்த ப்ரஹ்மமென்னும் காரணப் பொருளைத் தான் ஸகல காரண வாக்யங்களும் ஏககண்டமாகக் காரணமாயும், உபாஸ்யமாயும், பரமப்ராப்யமாயும் அறுதியிடுகின்றன வென்று முதல் அத்யாய முடிவு ஸூத்ரமான 'ஏதேந ஸர்வே வ்யாக்யாதா வ்யாக்யாதா:' என்ற ஸூத்ரங் காட்டிய ஸர்வ வேதாந்த தாத்பர்ய நிர்ணயத்தையும், ஸூசிக்கிறார். இக்காரணப்பொருள் எப்படி அசைக்க முடியாமல் த்ருடமோ, அப்படியே அவருடைய காரணத்வமும் அசைக்க முடியாமல் த்ருடமானது. 'எந்திடரே' என்பதற்கு, 'ஸ்தாஸ்நும் த்ருவஸ்தாணவிஷ:' என்று ரங்கராமாநுஜ ஸ்வாமி பொருள்ஸாதித்தது, ஸர்வ வேதாந்தங்களாலும் நிஸ்ஸம்சயமாக நிர்ணயித்து வ்யாக்யாநம் செய்யப்பட்டதென்ற கருத்தேயாகும். 'அபௌருஷேயமான வேத ப்ரதிபாத்யனுகையால் வந்த தார்ட்யத்தைச் சொல்லுகிறது' என்று ஈடு இக்கருத்தையே காட்டிற்று. 'இப்படி ஸாத்ருடப்ரமாணஸித்தர்' என்றும் அங்கே ஸாதிக்கப்பட்டது. 'திடரே' என்று இங்கே முடித்து, ஸ்வாயம்புவ மென்னும் அடுத்த

அத்யாயத்தின் விஷய ஸூசநத்தை 'திட விசும்பு' என்று அடுத்த பாசுரத்தில் 'திட' சப்தத்தோடு தொடங்குவது ரஸிக்கத்தக்கது. இங்கே 'திடரே' என்று சொல்லப்பட்ட காரணப்பொருளின் காரணத்வம் அபாத்யமாக த்ருடமென்று இம்முடிவுபதத்தையும், அந்தத் தொடக்கப் பதத்தையும் சேர்த்துக்கொண்டு 'காரணத்வாபாத்யத்வம்' என்று முதல் இரண்டத்யாயங்களின் விஷயங்களை ஸூசிக்கும் ச்லோகமும் ஸூசிதமாகிறது.

ஏழாம்பாட்டு

திடவிசும் பெரிவளி நீர் நில மிவைமிசை
படர்பொருள்முழுவதுமாயவை யவைதொறும்
உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர் மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே.

[திருவாய்மொழி 1-1-7]

முன் அத்யாயத்தில் கூறப்பட்ட ப்ரஹ்மத்தின் ஜகத்காரணத்வத்தையும் உபயவிபூதியின் ஆதிபத்யத்தையும் பரம வ்யோமமென்னும் ஸாச்வத இன்பச் சுடர் விசும்பில் எல்லோர்க்கும் பரம ப்ராப்யமான பரம புருஷார்தமாயிருப்பதையும், பிறரால் யுக்திகளாலாவது, ருஷிகளின் ஸ்ம்ருதிகளாலாவது, உலகத்தில் ப்ரசாரமாயுள்ள மற்ற சமயங்களைக் கொண்டாவது, வேதாந்தங்களுக்குள்ளே மேலாகத்தோன்றும் பரஸ்பர விரோதங்களைக்கொண்டாவது அசைக்கக்கூடாமல் கல்தூணை ஆட்டி ஆட்டிக் கெட்டியாய் நிலைநிறுத்துவதுபோல த்ருடமாக இந்த அத்யாயத்தில் ப்ரதிஷ்டாபநம் செய்யப்படுகிறது.

'எந்திடரே' என்று முன்பாட்டில் கூறிய ஸாச்வத ஸ்வதந்த்ர நிர்விகார த்ருட ப்ரஹ்மமே திடம். அது பரம வ்யோமமென்னும் திட விசும்பு. அதன் ஆநந்த விபூதியான விசும்பே ஸாச்வத விசும்பு என்பதெல்லாம் கிடைக்கும்படி அந்தாதி க்ரமாந்வயமாக எந்திடரே திடர் எந்திடரே திடவிசும்பு என்று பாடுகிறார். ப்ரஹ்மத்திற்கே ஆகாசம், தஹராகாசம், பரம வ்யோம, ப்ரஹ்மலோகம், பரமபதம் என்கிற திருநாமங்கள் முக்யமாக உள்ளதை முன் அத்யாயத்தில் காட்டப்பட்டதையும் ஸூசிக்கிறார்.

'[illegible]' என்றபடி ப்ரஹ்மமொன்றே தானாக இதராதீநமாய் மற்ற எல்லாவற்றுக்கும் ஆச்ரயமான வாஸஸ்தாநமாயும், ஸகலவிதமான லய ப்ரளயாதிகளில் அயநமான லய ஸ்தாநமாயும் ப்ராணமாயிருப்பதையும் ஸூசிக்கிறார். 'திட'வென்று தொடங்கி, 'சுரனே' என்று இப்பாசுரத்தை முடிப்பதும் ரஸிக்கத்தக்கது. ப்ரளயத்தில் விச்வத்தையும் உண்ட தேவன் ப்ரளயத்திலும் த்ருடமாக ஸர்வத்திற்கும் ப்ரளயாதாரமாக இருக்கும் தேவன் 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத்' என்ற மஹோபநிஷத்தின்படி நாராயணனே என்பதையும் ஸூசிக்கிறார். மஹோபநிஷத் என்கிற திருநாமத்தில் மஹச்சப்தத்திற்கு 'சுடர்மிகு' என்று தமிழில் ப்ரதிபதம் போலும். '[illegible]' என்கிற யதிராஜ ஸப்ததி ச்லோகத்திலும் '[illegible]' என்கிற விசேஷணம் மஹோபநிஷத்தைக் குறிக்கிறது. மார்க்கண்டேயனும் கரியே' என்று 'ஒன்றுந்தேவில்' பாடுகிற ப்ரஸித்திபை 'இவையுண்ட சுரனே' என்ற ஏவகாரத்தால் ஸூசிக்கிறார். காமோபாதி நீங்கும் ப்ரபாவமுடைய இவரும் ஸாக்ஷியே.

'திடவிசும்பு' என்பது அவ்யாக்ருதாகாசமென்னும் த்ருடமான மூலப்ரக்ருதியையும், 'சுரரறிவருநிலை விண்' என்னும் பாசுரத்தில் 'விண்' என்னும் பதத்தைப்போல் குறிக்கிறதாகவும் கொள்ளலாம். ஸாங்க்யர் சொல்லும் மூலப்ரக்ருதியும் இந்த திடரான சுரருக்குள், 'தம: பரே தேவ ஏகீபவதி' என்றபடி ஒன்றில் லயித்து அவிபாகமடைந்து நிற்பது. அது அவருடைய சரீரமாய் அதற்கு உயிரானவரால் அதிஷ்டிதமாய் ப்ரவர்த்திதமாய் ஜடப்ரபஞ்சமான ஆகாசாக்நி வாய்வாதிகளாகப் பரிணமிப்பது என்னும் விஷயத்தையும் இப்பாசுரத்தில் திடவிசும்பான அவ்யாக்ருதாகாசம் அவருக்கு உடலாய் அந்த உடல்மிசை அவர் உயிராயிருந்து வ்யாக்ருதமாகிறதென்பதை ஸூசிக்கிறார்.

'விசும்பு' என்பது பூதாகாசத்தையும் சொல்லலாம். பஞ்ச பூதங்களில் பூதாகாசத்

தைப் பௌத்தர்கள் ஒப்புவதில்லை. நான்கே பூதங்கள்தான். லோகாயதருக்கும் அப்படியே. ‘ஆகாஶேசாவிஶேஷாத்’ என்கிற பௌத்தாதிகரண ஸூத்ரத்தில் இதைக் காட்டப்போகிறார். ‘ஆகாஶமும் அபாதிதமான த்ருடப்ரதீதிஸித்தம்’ என்று அங்கே ஸ்ரீபாஷ்யம். ‘திடவிசும்பு’ என்பதால் இதுவும் ஸூசிதம். ‘நாலே பூதங்களென்பவனை நிராகரிக்கிறாராகவுவாம்’ என்று இங்கே ஈடு. ‘திடவிசும்பு’ என்கிற இத்தால் அவைதிக மர்யாதையிலே நடக்கிற லோகாயதிகனை நிரஸிக்கிறார் என்றும் ஈடு. திருவாறாயிரமும் அப்படியே. இந்தப்பாதத்தின் கடைசி அதிகரணத்தில் எல்லா ப்ராணிகளும் பரனோடு அவிபாகத்தையடைந்து லயித்து ஒன்றியிருப்பது காட்டப்பட்டது. இந்தப்பாதத்தின் கடைசி அதிகரணத்தையும் இப்பாசுரத்தின் கடைப்பாதங்களால் ஸூசிக்கிறார். பரனுக்கு வைஷம்யமில்லை, பக்ஷபாதமில்லையென்பது ப்ரளயத்தில் த்ருடமாகக் காட்டப்படுகிறது. உலகம் முழுவதுக்கும் லயம் ஸமமே. ஏகரூபமே. எல்லோரும் அசிதவிஶிஷ்டராய் நாமரூபமற்றுக் கிடக்கின்றனர். பகவான் தன் வயிற்றில் அப்படியே வைத்திருக்கும் கருணையை ‘உண்டு’ என்பதால் காட்டுகிறார். ஸூத்ரகாரர் ‘அத்தா’ (உண்பவன்) என்று ஸூசித்த ரஸத்தில் இன்புறுகிறார். இதனால் ப்ரளயம் கருணையே நைர்க்ருண்யமல்லவென்பதை விளக்குகிறார். ப்ராணிகளுடைய கர்மத்தின் வைஷம்யத்தால்தான் விஷம ஸ்ருஷ்டி. பகவானுக்கு ஸ்வயமாக யாதொரு வைஷம்யமுமில்லை; எல்லோர்க்கும் ஸமனே என்பதை ப்ரளயம் காட்டுகிறது. ஸ்ருஷ்டியில் யௌகபத்யம்(ஏககாலத்தில் ஏற்படுவது) அநுக்ரஹ கார்யம்’ என்று ஈடு ஸாதித்ததுபோல ப்ரளயத்திலும் ‘யௌகபத்யம்’ கேவலம் பகவதிச்சாதீநம்.

‘உண்ட சுரனே’ என்பதால் இல்வலன், வாதாபி என்ற அஸுரரைப்போல உண்பவனல்ல. நிக்ஷேபம்போல் வைத்துச் சிதையாதே காத்து வெளியே தானும் கூடியிருந்து வ்யாகரணம் செய்பவனென்னும் ரஸ ஸூசனை. தேவர்கள் பக்ஷிப்பதில்லை என்று ச்ருதி. ஸூரர் உண்டு ஜீர்ணமாக்கார். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் மூன்றையும் இந்த தேவரே செய்கிறாரென்பதை விளக்குகிறார். இத்தனை கார்யங்களும், எல்லோரையும் வீடு சேர்த்து அமுதாகப் புஜித்து இனிப்புத் தருவதற்கே. தனக்கு ஆராவமுதாய்ப் பகவான் உண்பதே சேதநருக்குப் பேரின்பம். சுடர்மிகு சுருதி அப்படிப் பரன் உண்பதை விளக்குகிறது. ‘சுடர்மிகு சுருதியுள்’ என்னும் இப்பாசுரத்தில் காட்டும் தத்வங்களெல்லாம் த்ருடமாக விளக்கப்பட்டன. திருவாறாயிரத்தில் அந்த சுடர்மிகு சுருதிகள் மிக விஸ்தாரமாய் உதாஹரிக்கப்பட்டன. ‘சுடர்மிகு சுருதியே’ திடம்; மற்ற அநுமாநாதிகள் திடமல்ல. ‘தர்க்கங்கள் அப்ரதிஷ்டிதங்கள்’ ‘அத்ருடம்’ என்னும் இந்தப் பாத ஸூத்ரங்கள் ஸூசிதம். தர்க்கங்கள் அப்ரதிஷ்டிதமென்பதால் ச்ருதி ப்ரமாணம்தான் த்ருடமென்பது ஸூசிதம். ‘ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்’ என்ற இந்தப் பாத ஸூத்ரத்தையும் இதனால் ஸூசிக்கிறார். ச்ருதி கூறியதை நாம் ஆக்ஷேபிக்கக் கூடாது. ச்ருதிக்கும் மஹர்ஷிகள் பொருள் விளக்கத்தால் கருத்து ஸ்பஷ்டமாக்கப் படும். வேதத்தின் மறைபொருள்களை விளக்கும் சுடர்கள் மஹர்ஷிகளின் ஸ்ம்ருதிகளான உபப்ரும்மணங்கள். கபில மஹர்ஷியை ஜ்ஞாநி ச்ரேஷ்டராக வேதமே கொண்டாடுகிறது. அவர் சுடர் விளக்கப்படிதான் ச்ருதிப் பொருளைக் கொள்ளவேணுமென்று ஸாங்க்யர் கக்ஷி. வேத சாஸ்த்ரத்திற்கு விரோதமில்லாத தர்க்கம்தான் ஆதரிக்கத்தக்கது. ஸ்ம்ருதிச் சுடரிலும் வேதச் சுடரே மிக்கது. ஸ்ம்ருதியும் சுடர்தான். ஆயினும் வேதச் சுடரின்படியே அதை ப்ரதிபிம்பநம் செய்தால்தான் அது ப்ரமாணமாகும். வேதச் சுடருக்கு விரோதமாக அது எதிர்நிற்காது. ஸ்ம்ருதியிலும் மிக்க சுடர் ச்ருதி என்பதையும் ஸூசிக்கிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பரமனை அறிந்த பக்தசிகாமணி

[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாச்சார்யர், திருவஹீந்த்ரபுரம்.]

உலகத்தில் சிலரது இயற்கை எதாவது ஒன்றைப் பார்க்கும் போது அப்பொருள் தமது கண்களுக்கு எவ்வாறு இலக்காகிறதோ அந்தவுருவையே மனத்திலும் நினைத்துக் கொண்டு அதற்காக அப்பொழுது ஏற்படும் உணர்ச்சிகளை யடைதல். பற்பல சிந்தனைகள் அல்லது கவலைகள் நிறைந்த மனத்தையுடைய மற்றுஞ்சிலர் தம்மெதிரில் எப்பொருள் நிற்பினும் அவைகள் எதிலும் தம்மனத்தைச் செலுத்தாமல், என்றும் மாறாத தம் சிந்தனைகளிலேயே மனத்தை யோட விட்டு, கண்ணிருந்தும் எதிரே தோன்றுமவைகளைக் காணவியலாதவரே யாவர். ஆனால் கலக்கமற்ற பரிபூர்ணமான ஜ்ஞாநங்கனிந்த நலங்கொண்ட கவிச்ரேஷ்டர்களோவெனில் தமக்கு கண்ணுக்கிலக்கான பொருள்களை குணத்தாலும் உருவத்தாலும் இவை எத்தன்மையன என்று அவைகளின் மாற்றையும் நிறையையும் ஆராய்கிறார்கள். மற்றும் அவர்கள், இப்பொருள்களின் உருவத்திற்கும், குணத்திற்கும் எவ்வெவைகளை உவமிக்கலாமென்றும் ஆராய்கிறார்கள். அதிலும்காணும்பொருள்களெல்லாம்கருணையங்கடலான கமலக்கண்ணனது திருவுருவாகவே கொள்ளும் அந்தமில் சீர் அடியார்கள் முன்னே எதாவது காணப்பட்டாலோ! அதிலும் நினைத்தவர் மனம் கோயில் கொள்ளும் பத்தர்க்கெளியனாகிய நாராயணனே யவர்கள் கண்களுக்கிலக்காகும்போது ! ஆஹா ! கேட்கவா வேண்டும்? அவர்களது பக்திச் செல்வம்போலவே ஊற்றெடுத்தோடும் சிந்தனைச் செல்வத்திற்கும், பெருக்கெடுத்தோடும் அமுதச் சொற்செல்வத்திற்கும் ஓர் வரையறையுண்டோ? அதுமட்டுமா? அவர்களுடைய அமுதவாக்கைக் கற்கின்றவர்கள் கண்களுக்கும் தாம் கண்டதைக் காட்டுகிறார்கள். தம் உணர்ச்சிகளை அவர்களுக்கும் ஊட்டுகிறார்கள். மேலே ஒருபக்தர்திலகம் தாம் ஸர்வேச்வரனைக் கண்டுகொண்ட வகையை யாராய்வோம்.

பகவான் தமது பரிவாரங்களுடனும் அடியார்களுடனும் தமது அர்ச்சாவதார விபவங்களுடன் திருவீதியில் எழுந்தருளுகிறார். மஹாகவியாகிய பக்தசிகாமணி யொருவர் ஸர்வேச்வரனை ஸேவித்து நிற்கிறார். மற்றும் பல வடியார்கள் பகவானுடைய கருணையைச் செவிக்கினிய செஞ்சொற்களால் துதித்து மகிழ்வதையும் கேட்கிறார். தமக்காகவே. தாம் ஸேவித்து மகிழ்வதற்காகவே- ஸர்வேச்வரன் தன்னை எதிர்கொண்டு திருவீதியில் ஸேவை ஸாதிப்பதாகத் தம்மனத்துட்கொள்ளுகிறார். அந்த எம்பெருமானுடைய கைம்மாறு கருதாத கருணை பொழியும் தன்மையையும், ஸௌலப்யத்தையும் உருவகம் செய்து பார்க்கிறார். உடனே யவை நிறைசூல்கொண்டு பொழியும் காளமேகம்போலத் தோன்றுகின்றன. அப்பொழுது அந்த பக்தருடைய கண்களுக்கு எம்பெருமானுடைய அர்ச்சாவதாரம் மாத்திரம் இலக்காகவில்லை. அரவினமளியேறி எறிகடல் நடுவுளறி துயிலமர்ந்த தாமரை யுந்தி தனிப் பெருநாயகன் தானேவந்து நிற்கிறான். அவனது அந்த கல்யாண குணங்களும் எல்லையற்ற கருணையும், அளவிட்டு அறிய முடியாத ஸ்வரூப ரூப குண விபூத்யாதிகளும் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு குழுமி,பக்தர்முன் சேர்ந்து நிற்கின்றன. மற்றும் சுத்தஸத்வம் நிறைந்த ஸ்வரூபமென்பதையும், சுத்தஸத்வம் மிகுந்த முக்தர்களுக்கு இருப்பிடமான திருமேனியென்பதையும் காண்கிறார் பக்தர். அந்த பக்திப் பெருஞ்செல்வருடைய கண்ணிற்கு இவையெல்லாம் சேர்ந்து முத்துக்கூட்டம் நிறைந்த மிகப்பெரிய கருங்கடலாகக் காக்ஷியளிக்கின்றன.

இதுமட்டுமா?

ஸர்வேச்வரனுடைய பரத்வமும் என்றும் சஞ்சலமற்று ஒரேநிலையில் நிற்குந்தன்மையும், ஆனந்தத்வம், அமலத்வம் முதலிய குணங்களும், சோதி யுருவமாகிய ஜ்ஞாநஸ்வரூபமும், சுடர்விட்டு ப்ரகாசிக்கும் பூஷாயுதங்களும், அழகும், கருணையும், சோதியும் ஒருங்கே பெருக்கெடுத்தோடும் திருமாமகள் நித்ய வாஸம் செய்யும் பொன்மார்பும், எவ்வெவ்விடங்களிலிருந்து த்யானித்து வணங்கி வழிபடும் பக்தர்களுக்குத் தான் இருக்கு மிடத்திலிருந்தே தோற்றமளிக்கும் தன்மையும் ஒருங்கே தோன்றுவதை காண்கிறார் பக்தர். ஆயிரமாகப் பெருகிய அருவித்திரள் பல விளங்குகின்ற மேருபர்வதம்போலத் தோன்றுகின்றன அவை. ஆழியும் சங்கமும் மேருமலையில் தோன்றி வலம் வரும் சூரிய சந்திரர்களாகக் காண்கிறார் பக்தர். தவிர, பகவானுடைய திருமார்பும் தோளும் மலைகளை யொத்திருப்பதனாலே பல பொன் மலைகள் ஓரிடத்தில் தோன்றிப் பல அருவித் திரள்களுடன் விளங்குவது போலவும் தோன்றுகின்றன. இப்படி ஸேவித்தும் பக்தருக்கு ஓர் ஐயமும் எழுகின்றது. அநந்த கல்யாண குணகண மஹோததியான விபுவான ஸர்வேச்வரன் தன்னொருவனுக்காகவோ இவ்வண்ணம் ஸேவைஸாதிக்கக்கூடும்? அந்த க்ஷணத்திலேயே அந் நினைவிற்கு ஸமாதானமும் செய்துகொள்ளுகிறார்.

அழகிய கரிய பெரிய கூந்தலையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக ஒன்றையொன்று நிகர்த்த மிகப்பெரிய வ்ருஷபங்களை யடக்கியவனை மணந்தவனல்லவோ? அவனுக்குத் தன்னிடத்திலும் அளவற்ற வாத்ஸல்யம் உண்டு. ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் தனக்குப் பதினாறாயிரவர் தேவிமார் இருக்கவும், ஒருத்திக்காக மிகப்பெரிய ஏழு வ்ருஷபங்களை யடக்கி அவளை மணந்துகொண்டமை அவளிடத்து தமக்கமைந்த அளவற்ற கருணையேயல்லாது வேறில்லையாகையால் அவன் தமக்கும் கருணைமழைபொழிவான் என்றவாறு பக்தர் மனத்தில் தோன்றிய இவ்வனுபவமெல்லாம் கடல்மடை திறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓர் அமுதச் செய்யுளாக ஓடிவந்தன வெளியே. உலகுய்யவவதரித்த அந்தப் பாசுரத்தை கீழே தருகிறோம். இந்தப் பெரும் பக்தர் பரமனிடத்திலிருந்து வாள்வலியால் மந்திரங்கொண்ட மங்கையர்கோன் பரகாலன். அவருடைய பக்திப் பெருஞ்சிந்தைக்கும் கண்ணிற்கும் இலக்கானவர் திருச்சித்திரகூடத் தெம்பெருமான்.

பருவக் கருமுகிலொத்து
  முத்துடை மா கடலொத்து
அருவித்திரள் திகழ்கின்ற
  ஆயிரம் பொன்மலையொத்து
உருவக் கருங்குழலாய்ச்சி
  திறத்தினமால் விடைசெற்று
தெருவில் திளைத்துவருவான்
  சித்திரகூடத்துள்ளானே.

இச் செய்யுளின்கண் திருமங்கையாழ்வார் தாம் கண்ட பரம் பொருளை நமது முன்னிலைக்கு எவ்விதம் கொண்டுவந்து காட்டுகிறார் என்பது ரஸிகர்களின் ஆராய்ச்சிக்குரியது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்

ஒருதடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100–க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் காபி 1-க்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

(9-ஸம்புடம் 12.வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. வித்வான் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ப்ரஹ்மதேசம்]

30 [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

31 [illegible] ।
[illegible] ॥

32 [illegible] ।
[illegible] ॥

33 [illegible] ।
[illegible] ॥

34 [illegible] ।
[illegible] ॥

35 [illegible] ।
[illegible] ॥

36 [illegible] ।
[illegible] ॥

37 [illegible] ।
[illegible] ॥

38 [illegible] ।
[illegible] ॥

39 [illegible]
[illegible] ।

𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀 𑌘𑍋𑌣𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌥𑌂 𑌯𑌾 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌨𑌿𑌜𑌯𑌾 𑌶𑍋𑌭𑌯𑌾 𑌤𑌾𑌂 𑌸𑌨𑌾𑌥𑌾𑌂
𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑍈𑌃 𑌷𑌡𑍍𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌯𑌾 𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑍇 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌤𑌾𑌂 𑌸𑌕𑌲𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 ॥

40 𑌯𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌗𑌣𑌾𑌰𑌮𑍍𑌭𑍍𑌯𑌤𑍇 𑌹𑍋𑌷𑌿𑌤𑌮𑍍
𑌵𑌿𑌜𑌯𑌂 𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌦𑍍𑌰𑌿𑌨𑌾𑌯𑍇𑌨 𑌭𑌵𑌤𑌿 𑌵𑌸𑌿𑌤𑍋 𑌹 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍋 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ।
𑌨𑌾𑌯𑌂 𑌸𑌂𑌵𑍇𑌦𑌕𑌾𑌨𑌾𑌂 𑌕𑌨𑌸𑌿 𑌨𑌾𑌵𑌰𑌾 𑌕𑌲𑍍𑌪𑍇𑌤 𑌏𑌰𑍋𑌶𑍍𑌯𑌜𑍍𑌞
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍈𑌶𑍇𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌸𑌹𑌾𑌯𑌮𑍍 ॥

41 𑌇𑌤𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑌙𑍍𑌕𑌿𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌿𑌤𑍇 𑌸𑍍𑌵𑌗𑌣𑌾𑌶𑍇𑌤𑌨𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑍇
𑌸𑍌𑌨𑍍𑌦𑍍𑌯𑌣 𑌨𑌿𑌜𑍇𑌨 𑌦𑍇𑌵𑌤𑌸𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌪𑍂𑌦𑍇 𑌕𑌣𑍍𑌠𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌨𑍍𑌤 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌗𑌾𑌯𑌿𑌨𑍋𑌽𑌵𑌿𑌰𑌤𑌯𑌾𑌤𑍍𑌕𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍋 𑌨𑌤𑍇-
𑌷𑍍𑌵𑌾𑌵𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌸𑍍𑌥𑍈𑌵𑌵𑌾𑌸𑌶𑍇𑌷𑍍𑌵𑌨𑌾𑌹𑌵𑌤𑍍𑌯𑍃𑌤𑍍𑌵𑌹𑌾𑌤𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑍍 ॥

42 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌿𑌯𑌶𑍀𑌕𑌿𑌶𑍇𑌷𑌾𑌨𑍍 𑌕𑌿𑌯𑌾𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑌾𑌵𑌿𑌪𑌲𑍍𑌯𑌵𑌯𑍍𑌯 𑌯𑍋𑌗𑍀 ।
𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌂 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌪𑍂𑌜𑌗𑌾𑌕 𑌵𑍇𑌗𑌾𑌤𑍍 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌨𑌾𑌥𑌮𑍍 ॥

43 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑍌 𑌶𑍇𑌷𑌶𑍈𑌲𑌾𑌖𑍍𑌯𑍇 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌵𑌸𑌤𑌿 𑌕𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌜𑌨𑌾𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌯 𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌂 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇 ॥

44 𑌕𑌲𑍌 𑌚 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌧𑌿𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 ।
𑌸𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌨𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋𑌽𑌵𑌿𑌵𑌿𑌧𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 ॥

45 𑌕𑍃𑌤𑍇𑌶𑍇𑌨 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌤𑍋𑌽𑌪𑌿 𑌤𑍇 ।
𑌸𑍇𑌵𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌶𑍀𑌘𑍍𑌰𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌂 𑌵𑌿𑌤𑍇𑌨𑌿𑌰𑍇 ॥

46 𑌕𑌾𑌰𑍍𑌯 𑌕𑍈𑌙𑍍𑌕𑌰𑍍𑌯𑌸𑌙𑍍𑌘𑌂 𑌕𑍃𑌤𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍 ।
𑌵𑌯𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌗𑌣𑍈𑌃 𑌸𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌭𑌿𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 ॥

47 𑌸𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍇𑌨 𑌸𑌨𑍍𑌦𑍋𑌹𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌾𑌮𑍋 𑌨𑌿𑌜𑍇 𑌹𑍃𑌦𑌿 ।
𑌨𑌿𑌜𑍇𑌨 𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑌃 𑌯𑌥𑌾 𑌜𑌲𑌨𑌿𑌧𑍌 𑌕𑌲𑌾𑌃 ॥

48 𑌆𑌰𑍋𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌰𑍋𑌹𑌨𑍍𑌤𑌿 𑌸𑍋𑌪𑌾𑌨𑍇 𑌕𑌨𑌕𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌸𑍇𑌵𑌾𑌯𑍈 𑌕𑌾𑌗𑌣𑌾𑌨𑍇𑌨 𑌸𑌾𑌦𑌰𑌾𑌃 ॥

49 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌕𑌾𑌗𑌸𑍌𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌰𑍍𑌥𑍍𑌯 𑌕𑍃𑌨𑌿𑌸𑍍𑌤𑍁𑌤𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌕𑍃𑌪𑌾𑌦𑍇 𑌕𑌾𑌨𑌨𑍇 𑌨𑌿𑌜𑍇 ॥

50 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑌸𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑌦𑌿𑌦𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌹 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌙𑍍𑌘𑌾𑌵𑌶𑌾𑌨𑍍𑌦𑌨𑍀𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌷𑍀𑌣𑌮𑍍 ॥

19952

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பயலும் பொறுமையும்

(9.ம் ஸம்புடம் 12.வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீஉப. கல்யாணபுரம் S. T. ஸ்ரீநிவாஸாச்சார்யர் M. A. வித்வான், L. T. திருவையாறு.]

யதுநாதனுக்குச் சிறு குழந்தைகளிடம் அதிகமான ப்ரீதி என்று முன்னமே சொல்லப்பட்டது. பால்யமும் தெய்வத்தன்மையும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதன போலும்! எல்லையற்ற சக்தியையும் சுடரையும் இனிமையையும் தனக்குக் குணமாகக் கொண்ட ஸர்வேச்வரனும் சிசுவாகவும் பாலனாகவும் வந்தல்லவோ உலகத்தை ஆகர்ஷித்தது! இப்படிப்பட்ட குழந்தைகளிடம் தெய்வத்தினிடம் பழகுவதுபோல் பழகவேண்டுமென்பார். அவர்களின் அர்த்தமற்ற பேச்சுக்களையும் ரஸித்துப் பொறுமையாய் விடை கொடுப்பார். வறுமையுற்ற பாலர்களுக்குத் தாம் உணவளித்து ஆதரிக்கும் நிலைமையிலிருந்தும், அவர்களைச் சற்றும் அதிகாரமாகவோ, கடிந்தோ பேசமாட்டார். ஒருஸமயம் ஐந்தாறு பையன்கள் கூச்சலிட்டுச் சண்டையிட்டுக்கொண்டு தங்கள் விவாதத்தைப் ‘பட்டுமாமா’விடம் சொல்லிக் கொள்வதற்காக வந்தனர். திருமேனியின் செவ்விபற்றிப் பையன்கள் அவருக்குப் பட்டுமாமா என்று நாமகரணம் சூட்டியிருந்தனர். ஒருவன் ‘பட்டுமாமா! இந்த விஜயம் வைகுந்தமே காஞ்சீபுரம் என்கிறான்; காஞ்சீபுரம், வைகுந்தமாகுமா? வைகுந்தம் எங்கேயோ பல கோடி மைலுக்கப்பால் உயர இருக்கிறதென்று எங்கப்பா சொல்லியிருக்கிறார். காஞ்சீபுரம் இதோ நினைத்தால் போய்விடலாம்’ என்றான். பட்டுமாமா அவர்களுடன் உட்கார்ந்து கொண்டார். ‘குழந்தைகளே! ஒரு பொருள் எளிதில் கிடைக்கிறதென்பதால் அதன் உயர்ந்த தன்மை போய்விடுமா? உங்கள் வீட்டில் குடத்தில் ஜலம் வைத்திருக்கிறதே அந்தஜலம் ச்ரேஷ்டமா? ஏரியிலிருக்கும் ஜலம் ச்ரேஷ்டமா?’ என்று கேட்டார். அந்தப்பையன் சற்றும் தாமதியாது ‘என்னமாமா! ஏரிஜலந்தானே குளத்துஜலம். வித்யாஸமே யில்லையே’ என்றான்.

பட்டுமாமா — ஏரிஜலத்தில் பக்கத்துப் புதர்களிலிருந்து இலைகள் உதிர்கின்றதல்லவா? மற்றும் துரும்புகளும் மிதக்குமல்லவா?

பையன் – ஆமாம், அம்மா அதற்காகப் பாசியை ஒதுக்கித் துரும்புகளைத் தள்ளி நல்ல ஆழத்திலிருந்து ஜலம் எடுத்து வருகிறாள்.

பட்டுமாமா — அப்படியானால் ஏரிஜலத்தைக் காட்டிலும் ... ...

பையன் — எங்கள் குடத்து ஜலம் சிறந்ததென்றே சொல்லலாம்.

பட்டுமாமா – அதேபொருளாக இருந்தாலும் இடத்தை–காலத்தை நோக்கி, அதற்கு இன்னும் உடர்வு வருகிறதல்லவா?

பையன்களெல்லோரும் – ‘ஆமாம்’ என்றார்கள்

பட்டுமாமா — (சற்று அன்பு ததும்பியகுரலில்) ஸுகமாய் அரண்மனையில் இருக்கவேண்டிய ஒரு ராஜா குளிரில் உன்னைப் பார்ப்பதற்காக நடந்துவந்து ஏரிக்கரையில் காத்திருந்தால்? — –

பையன் – அந்த ராஜா மிகவும் நல்லவர். இரக்கமுள்ளவர்.

பட்டுமாமா — ஸகல லோகத்திற்கும் ராஜாவாக இருக்கும் பெருமாள் நமக்காகக் காஞ்சீபுரத்திலும் வெள்ளேரியிலும் வந்து காத்து நின்றால் அவர் வேறாக ஆய்விடுவாரா?

பையன் — இல்லை இல்லை.

மற்றப் பையன்களும் கவனித்துக் கேட்டார்கள்.

பட்டுமாமா — ஏரிஜலம் குடத்திலிருந்து உயர்வையடைவதுபோல்– ராஜா ஏரிக்கரைக்கு இறங்கிவந்து ஏற்றம் பெருவதுபோல்,– ஸர்வேச்வரன் காஞ்சி முதலிய திவ்யதேசங்களில் கோவில் கொண்டு மெருகு ஏறிய தங்கம்போல் விளங்குகிறான். அப்படியானால் காஞ்சி வைகுந்தமே என்றும், அதைவிடச் சிறந்ததென்றும் சொல்வதில் தடை என்ன? குழந்தைகளே! ஒரு பொருள் வெகுதூரத்தில் இருப்பதனால் உபயோகமற்றது என்று சொல்ல முடியாது. கண்ணுக்குப் புலப்படாததனால் காரியமற்றது

என்று சொல்வதற்கில்லை.

வரதா! ஸூர்யன் நமக்கு எவ்வளவு ஸமீபத்தில் இருக்கிறான்? சொல் என்றார்.

வரதன்—பல கோடி மைல்கள் தூரத்தில் இருக்கிறான் என்று பூகோள புத்தகத்தில் சொல்லி யிருக்கிறது

ப. மாமா-ஸூர்யனில்லாவிட்டால் என்ன? அவனால் ஆகும் பயன்கள் யாது?

பையன்கள் (யாவரும் ஒரே மூச்சில்) பல! பல!

ப. மாமா-காற்றை யாராவது பார்த்திருக்கிறீர்களா?

பையன்கள்- 'காற்றை உணரலாமே யன்றிக் கண்ணால் பார்க்க முடியாது'

மாதவன் என்ற பையன்-

மாமா! வாயுவுக்கு ரூபமில்லை யென்றும் அதை த்வகிந்த்ரியத்தினால் தான் உணரலாமென்றும் அதன் குணம் ஸ்பர்ச மென்றும் எங்கள் தர்க்கவாத்தியார் சொல்லிக்கொடுத்திருக்கிறார்.

ப. மாமா—இந்திரியங்களில் சக்ஷுஸ்ஸுக்கு விஷயமில்லாத அதுவும் உண்மை யென்றுதானே சொல்லுகிறாய்? உணர்கிறாய்?—

மாதவன் -ஸந்தேஹமென்ன மாமா! ஏரியிலிருந்து மாத்தியாஹ்நிகம் பண்ணி விட்டு நாங்கள் வீடு திரும்பும் பொழுது பங்குனி சித்திரையில் வியர்வை கொட்டுகிறது அப்பொழுது வீசும் காற்று ஜில்லென்று உடம்பைத் தடவிக்கொடுத்து இளைப்பாற்றுகிறது.

ப-மாமா-வைகுந்தம் அப்படித்தான். பலகோடி மைலுக்கப்பால் இருந்தாலும் சந்திர ஸூர்யர்போல் நமக்கு ஹிதமும் ஸமீபமுமே.

குழந்தைகளுக்கெல்லாம் ஸந்தோஷம். தந்தி, தபால், ஒலிபரப்பு, புகைவண்டி இந்த விஷயங்களை அவர்கள் மனத்தில் படும்படி எளிய மொழியில் சொல்லுவார். வெகு பொறுமையுடன் சொல்லுவார். குழந்தைகள் ஆச்சர்யத்துடன் கேட்பர்கள் 'இந்தப் பட்டுமாமா எவ்வளவுபடித்திருக்கிறார்டா' என்று ஒவ்வொருவனும் சொல்லுவான். பாடசாலையில் சில குழந்தைகள் அறைகளில் குப்பை கூளங்களைப் பரப்புவதும், மசி முதலியவற்றைக் கொட்டுவதும் சாமான்களை அந்தந்த இடத்தில் வைக்காமல் நினைத்தபடி விட்டுவைப்பதையும் கண்டு கோபங்கொண்டு யதுநாதனிடம் பாடசாலை உபாத்தியாயர் புகார்செய்தார். ஒருஸமயம் மாலையில் குழந்தைகள் கோவிலுக்குச்சென்று திரும்புகையில் யதுநாதன் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். திருமலை என்னும் பையன் 'மாமா! வேணுகோபாலன் ராத்திரியில் தூங்க மாட்டார் என்றீர்கள். எங்க காவ்ய வாத்தியாரும் பெருமாள் தூங்குவதுபோல் தூங்காமலிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். ராத்திரி பெருமாள் என்ன செய்வார்' என்று கேட்டான். யதுநாதன் புன்சிரிப்புடன் 'வீடு வீடாய் வந்து பார்ப்பான். நோயாளிகளின் படுக்கைக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு அவர்களுக்கு ஆதரவாக உடம்பைத் தடவித் தூக்கத்தைக் கொடுப்பான். நல்ல குழந்தைகளுக்குப் பக்கத் துணையாயிருந்து திருடர்கள் பிசாசுகள் — — இவை வராமல் காத்து நிற்பான்-' என்று இவர் சொல்லும் பொழுதே கோபாலன் எனும் ஐந்தாறு பிராயமுள்ள குழந்தை அவரிடம் நெருங்கி அவரைப்பிடித்து நின்றது. அந்தக்குழந்தையை அணைத்தவண்ணம் 'பயப்படாதீர்கள்- எம்பெருமான் நம் பக்கத்தில் எப்பொழுதும் இருப்பவன். ராத்திரியில் ஏதாவது நல்ல இடம் இருக்கிறதா என்று பார்க்க வருவான். அழுக்கும் குப்பையும் நிறைந்து, சாமான்கள் கண்டபடி குவிந்து வெரு ஆபாஸமாக இருக்கும் வீடுகளுக்கும் அறைகளுக்கும் போகவே மாட்டான். அந்தந்த இடத்தில் அழகாக அடுக்கி ஸாமான்கள் வைக்கப்பெற்றதும், சுத்தமாய் கூட்டப் பெற்றதுமான அறைகளில் ஆநந்தப்படுவான். அதை விட்டுச் செல்வதற்கே நினைக்கமாட்டான். எங்கே அமைதியும் ஒற்றுமையும் பரிசுத்தியும் இருக்கின்றனவோ அங்கேயே ஸ்ரிய:பதியும் நித்யவாஸம் செய்வான். அதனால்தான் நம் பெரியோர்கள் சரீரசுத்தியையும் பக்தியையும் இணைத்தார்கள். சுத்தி, அழகு, அமைதிகளைத் தெய்வத்தின் உறைவிடமாகக் கண்டனர்' என்றார். அதுமுதல் பாடசாலை வெகு அழகாக ஆயிற்று. பையன்களின் உள்ளத்தில் அவரது தத்வ மொழிகள், பச்சைமரத்தாணிபோலப் பதிந்தன. புகார் செய்த ஆசிரியரே ஆச்சர்யமடைந்தார். வெள்ளேரியில் 'பட்டுமாமா' விடம் செல்லாத குழந்தைகள் இல்லை. (தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி ஸ்ரீ மாசி மீ 1951 பிப்ரவரி-மார்ச் மீ

(உத்தராயணம்-சிசிர ருது-கும்பமீ)

13—2—51	1வ	செவ்வாய்க்கிழமை	...	கும்பசுக்ல ஸப்தமி திதி; ரதஸப்தமி; அநத்யயநம்
17—2—51	5வ	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
18—2—51	6வ	ஞாயிற்றுக்கிழமை	...	புநர்வஸு குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்
19—2—51	7வ	திங்கட்கிழமை	...	புஷ்யம்; ஸ்ரீஅஹோபிலமடம் 37ம் பட்டம் (பிள்ளைப்பாக்கம்) ஸ்ரீ வீரராகவயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
21—2—51	9வ	புதன்கிழமை	...	மாசி மகம்.
1—3—51	17வ	வியாழக்கிழமை	...	அஷ்டமி-நவமி திதித்வயம்.
4—3—51	20வ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம்
5—3—51	21வ	திங்கட்கிழமை	...	த்வாதசி 0-25, த்ரயோதசி 56 3, ச்ரவணம் 38-8, முநித்ரய ச்ரவண த்வாதசி.
3—3—51	29வ	செவ்வாய்க்கிழமை	...	கும்ப சுக்ல ஷஷ்டி திதி.

ஓர் ஸந்தேஹம்

அர்த்தோதய மஹோதயங்களுக்குப் புண்யகாலத்வம் உண்டா? அல்லது கிடையாதா?

புண்யகாலத்வம் உண்டாகில் ஸ்நாநம் மாத்திரமா? அல்லது தர்ப்பணமும் உண்டா? இத்துடன் அமாவாஸ்யை சேர்ந்தால் இரண்டு தர்ப்பணமும் செய்யவேண்டுமா? அல்லது ஒன்றுதான் செய்யவேண்டுமா?

அர்த்தோதயாதிகளில் செய்யும் ச்ராத்தம் நித்யமா? நைமித்திகமா? காம்யமா? இவ்வருஷம் தை மாதத்தில் மஹோதயபுண்யகாலம் உண்டா? கிடையாதா? அப்படி உண்டாகில் அது ஸூர்யோதயகாலத்திலா? அல்லது எல்லாம் ஒன்றுசேரும் ஸமயத்திலா?

அன்றையதிநம் ப்ரத்யாப்திக ச்ராத்தம் வந்தால் அதை செய்துவிட்டு ஷை புண்யகால ச்ராத்தம் செய்யலாமா? இந்த ஸந்தேஹங்களை ஆஸ்திக வித்வான்கள் நன்கு பராமர்சித்து தகுந்த வசநங்களுடன் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' மூலமாய் அடியேனுக்கு பதில் அநுக்ரஹிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

திருக்கோட்டியூர் வாஸுதேவதாஸ:

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆஸ்திக்யம்

(9-ம் ஸம்புடம் 12வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

என்கிறபடியே தர்மாநுஷ்டாநத்திற்கு யோக்யமான மநுஷ்யஜந்மங்களிலும் பலதடவை பிறந்திருந்தும் 'இடகிலேனொன்றட்டகில்லேன்' 'தவத்துளார் தம்மிலல்லேன் தனம் படைத்தாரி லல்லேன்' என்கிறபடியே ஒரு நல்ல காரியம் செய்யாமையாலே 'அவத்தமே பிறவி தந்தாய்' என்று பிறந்து கெட்டவனுய்ப் பல பகலும் பழுதே போனபடியையும், இப்படி நன்மையில்லாது போனது மாத்ரமன்றிக்கே

'சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்துக்
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
தொண்டனேன்' என்றும்,
'கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோ
ளொன்றிலாமையினல்'
என்றும்,

'மானேய்கண்மடவார்மயக்கிற்பட்டு மாநிலத்து நானே நானுவிதநரகம்புகும் பாவம்செய்தேன்' என்றும் சொல்லுகிறபடியே நமன்தமர் செயயும் வேதனைக்கொடுங்கி நடுங்க வேண்டும்படியான பற்பல பாவங்களையும் முன்பு செய்திருப்பதையும் நினைத்து அஞ்சின நெஞ்சுடையனுய் வருந்துகிற ஸமயத்திலும் ஆபத் ஸகனுய் அஶரண்ய ஶரண்யனுய் இருக்கிற ஆழியான் திறத்திலோ ரன்பிலா வறிவிலாத நாயினேன் என்கிறபடியே அன்பும் அதற்குக் காரணமான தெளிவு மில்லாததினுலே 'நாதனே வந்துன் திருவடி யடைந்தேன்' என்றும், 'அடைக்கலம் புகுந்த வென்னை அஞ்சலென்ன வேண்டுமே' என்றும் வாய்புலற்ற மாட்டாதே 'ஶாஸ்த்ரம் ஹி வத்ஸலதரம் மாதா பித்ரு ஸஹஸ்ரத:' என்கிறபடியே ஸம்ஸாரி சேதநர்கள் விஷயத்தில் ஆயிரம் தாய் தந்தைகளைக்காட்டிலும் அதிக ப்ரீதியோடிருக்கிற ஶாஸ்த்ரம்

'ஸ்தேயம் ஹிம்ஸாந்ருதம் தம்ப: காம: க்ரோத:
ஸ்மயோ மத: | பேதோ வைரம
விஶ்வாஸ: ஸம்ஸ்பர்தா வ்யஸநாநி ச ||
ஏதே பஞ்சதஶாநர்தா ஹ்யர்தமூலா
மதா ந்ருணாம் | தஸ்மாதநர்தமர்தாக்யம்
ஶ்ரேயோऽர்தீ தூரதஸ்த்யஜேத் ||'

[ஸ்ரீ பாகவதம் ஏகாதசஸ்கந்தம்]

(கள் குடிப்பது சூதாடுவது தாஸீகமநம் செய்வது இந்த மூன்றுக்கும் வ்யஸநமென்று பெயர்)

'ஸம்ஸாரவ்ருக்ஷபீஜம் து
ஸ்தநஜாஸ்யஸம்ஹதம் |
தேஹோ வேஷ: ஸ்த்ரீரூபேண
ஸ்திதா நரகேஷ்வபி ஸ: ||
சர்மேண வர்ணிதம் யத்ஹ்ணம்
ப்ரஹ்ம: ஸ்வேதஜஸ்ராவ்யதம் |
ஸ்ரீஸத்வம் நரநாரீணாம்
விதூஷாம் நரகஸ்ததம் ||' என்றும்

அர்த்த காமங்களி லிருக்கும் தோஷங்களையெல்லாம் விழி கண் குருடன் போலிருக்கிற நமக்கு வ்யக்தமாகக் காட்டி ஸாரமில்லாத வஸ்துவுக்கு ஸம்ஸாரம் (நல்ல ஸாராம்ஶங்களை உடையது) என்றும் நல்ல பாம்பு என்னும் சில வஸ்துக்கள் விபரீதமான பெயர்களை வஹித்திருப்பதுபோல இங்கு சொன்னபடியே அநர்த்தங்களை உண்டாக்குகிற வஸ்துவுக்கு 'அர்த்யத இதி அர்த்த:' எல்லோராலும் விரும்பக்கூடிய வஸ்து வென்றும் கீழே சொன்னபடி நரக துல்யமாக இருக்கையாலே ஜுகுப்ஸைக்கு ஹேதுவான வஸ்துவுக்கு 'காம்யத இதி காம:' [எல்லோராலும் ஆசைப்படக்கூடிய வஸ்து] என்றும் விபரீதமான பெயர்களிருப்பதைக் கண்டு மோஹிக்காதீர்கள். ஆத்ம க்ஷேமத்தை விரும்புகிறவர்கள் இந்த அர்த்த காமங்களை அதிக

தூர தேசத்தில் விட்டுவிட்டு இருக்கவேண்டியதுதான் உசித மென்று உபதேசித்தால் அப்படி ஹிதத்தை உபதேசிக்கிற சாஸ்த்ரத்தில் த்ருடதரமான விச்வாஸ முண்டாகாததினாலும் விஷயாநுபவத்திலிருக்கிற அல்பத்வாதி தோஷங்கள் ப்ரத்யக்ஷ ஸித்தங்களாக இருந்தும், அநாதி விஷய வாஸநா தார்ட்யத்தினால் அவைகளைப் பரித்யஜிக்க முடியாமலிருக்கிற தன்னைக் குறித்து சாச்வதமான பேரின்பத்தை அநுபவிக்க ஸாதநமான மநுஷ்ய ஜந்மாவை நாம் அடைந்திருந்தும், அப்படிப்பட்ட சாச்வத பலத்தைக் கொடுக்கக்கூடிய சாச்வத புருஷனை அறிந்து ஆச்ரயிக்காமல் வீணான காரியங்களைச் செய்து ஜந்மத்தை வீணாக்கிக் கொண்டோமே என்று தன்னைக்குறித்து நிர்வேதத்தை (எவன்)அடைவனோ அந்த மஹா புருஷனைத் தெரிந்துகொள்வதற்காக அவனைத் தெரிவிக்கக்கூடிய ஆசார்யனையே ஆச்ரயிக்க வேண்டும் என்கிறது.

இவ்வுலகவாழ்க்கையிலுள்ள இன்பங்களெல்லாம் நாம் கீழே சொல்லியபடியே அல்பத்வம், அஸ்திரத்வம், துக்கமூலத்வம், துக்கமிச்ரத்வம், துக்கோதர்க்கத்வம் முதலிய பலவித தோஷங்களோடு கூடினவைகளாக இருக்கையாலே அவ்விஷயங்களையெல்லாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிற புத்திமான்களுக்கு இவ்வுலகத்து ஸுகாநுபவங்களில் வைராக்யமே உண்டாகுமானாலும்,

> 'ஶாஸ்த்ரம் ஹி வத்ஸலதரம்
> மாதாபித்ருஸஹஸ்ரத:'

என்கிறபடியே ஆயிரம் தாய் தந்தைகளைக் காட்டிலும், நம்மிடம் அன்புள்ளதான சாஸ்த்ரங்கள்

> 'உபரிஷ்டாத் ஸ வை லோகோ
> யோऽயம் ஸ்வரிதி ஸம்ஜ்ஞித: ।
> ந க்ஷுத்பிபாஸே ந க்லாநி:
> ந ஶீதோஷ்ணபயம் ததா ॥,
> பீ₃ப₄த்ஸமஶுப₄ம் வாபி
> தத்ர கிஞ்சிந்ந வித்₃யதே ।
> ந ஶோகோ ந ஜரா தத்ர
> நாயாஸபரிதே₃வநே ॥
> ந ஸ்வேதோ₃ ந ச தௌ₃ர்க₃ந்த்₄யம்
> புரீஷம் மூத்ரமேவ ச ।
> மநோஜ்ஞா: ஸர்வதோ கா₃ந்தா₄:
> ஸுக₂ஸ்பர்ஶாஶ்ச ஸர்வஶ: ॥
> ஶப்₃தா₃: ஶ்ருதிமநோக்₃ராஹ்யா:
> ஸர்வதஸ்தத்ர வை முநே ।'

என்கிற பாரதம் ஆரண்யபர்வ வசநங்களின் படியே இவ்வுலகத்திலிருக்கிற பசி, தாஹம், சிரமம், சீதோஷ்ணங்கள், ஜரை, சோகம், முதலிய தோஷங்கள் ஸ்வர்க்காதி மேல் லோகங்களில் இல்லை என்றும், மனத்துக்கு மிகவும் ப்ரியங்களான சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் முதலிய பேரின்பங்கள் அங்கு நிறைந்திருக்கின்றன வென்றும் சொல்லுகிறபடியினாலே, அந்த சாஸ்த்ரங்களில் நம்பிக்கையுள்ள புத்திமானுக்கு அப்படிப்பட்ட பரலோகத்து பேரின்பங்களை அநுபவிப்பதில் ஆசை உண்டாகாதா? என்கிற சங்கையை

'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந்' என்கிற வேதவாக்கியமானது பரிஹரிக்கிறது.

இப்பொழுது அந்த வேதவாக்கியங்களுக்கு ஸாங்கமாக வேதத்தை அத்தியயநம் பண்ணின த்ரைவர்ணிகன் வேதங்களின் கர்மகாண்டத்தில் சில கர்மங்களை அநுஷ்டிப்பதினால் சாச்வதமான ஸுகம் உண்டாகிறது என்று சொல்லுகிறதான சில வேதவாக்கியங்களை ப்ரமாண நியாயங்களோடு நன்கு ஆராய்ந்து பார்த்து இந்த கர்மங்களினால் நித்யமான பலம் ஸம்பவிக்காது என்று எவன் தீர்மானித்தானோ, அந்த மனிதன் அந்த சாச்வத பலத்தைத் தெரிந்து அநுபவிப்பதற்காக அவ்விஷயத்தை நன்கு உபதேசிக்கக் கூடிய ஆசார்யனை அடையவேண்டியது என்று பொருள்.

ஆக இதனால் இவ்வுலக வாழ்க்கையிலுள்ள பயன்களைக்காட்டிலும் ஸ்வர்க்காதிலோகங்களில் சிற்சில பேரின்பங்களிருந்தாலும் அப்பேரின்பங்களிலும் அநித்யத்வம் முதலான பற்பல தோஷங்கள் இருக்கிறபடியால் சாச்வதமான பேரின்பங்களை அபேக்ஷிக்கிற புத்திமானுக்கு அவ்வின்பங்களும் ஆதரிக்கக்கூடியதல்ல என்று

சொல்லப்பட்டதாகிறது.

இப்படி இவ்வுலகத்துச் சிற்றின்பங்கள் பலவிதங்களான தோஷங்களோடு கூடியிருப்பது போலவே ஸ்வர்க்காதி பரலோகத்துப் பேரின்பங்களும் அநித்யமாய் துக்கமூலமாய் துக்கமிச்ரமாய் இருக்கிறபடியினால் நித்ய நிர்த்தோஷமான மஹாநந்தத்தில் ஆசையுள்ளவனுக்கு ஸ்வர்க்க ஸுகங்களும் அநாதரிக்கக் கூடியவைகள்தான் என்கிற விஷயத்தை ஓர் பரமாஸ்திகனுடைய சரித்ரத்தின் மூலமாக இங்கு தெரிவிக்கிறோம்.

வ்ரீஹி த்ரௌணிக சரித்ரம்.

மஹாபாரதம் ஆரண்யபர்வம் 216-வது அத்யாயத்தில் வேதவ்யாஸர் தர்மபுத்ரனைக்குறித்துச் சொன்னது.

‘ஸிலொஞ்சவ்ருத்திர் தர்மாத்மா
முத்கல: ஸம்யதேந்த்ரிய: ।
ஆஸீத் ராஜந் குருக்ஷேத்ரே
ஸத்யவாகநஸூயக: ॥

[குருக்ஷேத்ரமென்கிற இடத்தில் முத்கலன் என்கிற ப்ராஹ்மணன் தர்மசிந்தையை யுடையவனுய் இந்திரியங்களை யெல்லாம் அடக்கினவனுய்ஸிலோஞ்சஜீவியாய் ஸத்யவாதியாய் அஸூயை இல்லாதவனுயுமிருந்தான்.]

இந்த ச்லோகத்தினுல் முத்கலனுடைய ஆஸ்திக்யத்தின் மேன்மை சொல்லப்படுகிறதென்பதை தெளிவாக இங்கு நிரூபிக்கிறோம். இங்கு முத்கலன் வஸித்த இடத்தை குருக்ஷேத்ர மென்று குறிப்பிட்டுச் சொன்னதினுல்

‘வாராணஸ்யாம் ஜலே முக்தி:
ப்ரயாகாயாம் பூமௌ ஜலே ।
குருக்ஷேத்ரே த்ரியா முக்தி:
பூஜலாகாசஜலேஷு ச ॥

[காசியில் கங்கைஜலத்தில் இறந்தவனுக்கு மோக்ஷம். ப்ரயாகையில் கங்கைஜலத்திலோ, அந்த பூமியிலோ இறந்தவனுக்கு மோக்ஷம். குருக்ஷேத்ரத்திலோவென்னில் அந்த பூமியிலோ, ஜலத்திலோ, அந்த ஆகாயத்திலோ மரித்தவனுக்கு மோக்ஷம்] என்றும்

‘குருக்ஷேத்ரம் கமிஷ்யாமி
குருக்ஷேத்ரே வஸாம்யஹம் ।
இத்யேவம் வாசமுத்ஸ்ருஜ்ய
ஸர்வபாபை: ப்ரமுச்யதே ॥’

[நான் குருக்ஷேத்ரத்திற்குப் போகவேணும்; அங்கு வஸிக்கவேணும்; என்று ஒருவன் வாயினுல் சொல்லிக்கொண்டிருந்தமாத்ரத்தினுலும், அவனுடைய பாபங்கள் போய்விடுகின்றன] என்றும்

‘பாம்ஸவோऽபி குருக்ஷேத்ரே
வாயுநா ஸமுதீரிதா: ।
அபி துஷ்க்ருதகர்மாணம்
நயந்தி பரமாம் கதிம் ॥’

[குருக்ஷேத்ரத்தினுடையமண் காற்று அடிக்கிறதினுல் ஒருவன் மேல்பட்டாலும் அவன் உயர்ந்த லோகத்திற்குப் போய்விடுகிறுன்] என்றும், ‘குருக்ஷேத்ரம் தேவயஜநம்’ என்றும் ‘ஸந்தாநு விஜாதயோ யேஷாநு ஸம்ஸ்ரயே ரநு ஷ்யதத:’ என்றும் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்யர்கள் சிரமப்பட்டாவது குருக்ஷேத்ரம் முதலிய புண்ய பூமியிலேயே வஸிக்கவேண்டும் என்று சாஸ்த்ரங்கள் விதித்திருப்பதில் அதிகமான ஆஸ்திக்யத்தினுலே தர்மக்ஷேத்ரங்களுக்குள் உயர்ந்ததான குருக்ஷேத்ரத்தில் நித்யமாக வஸித்தான் என்கிறுர்.

ஆனுலும் புண்யக்ஷேத்ரத்தில் வஸித்தமாத்ரத்தினுல் ஆத்மக்ஷேமத்தை யடைய முடியுமோ? ஹிம்ஸா ருசிகளான பாபிகளுக்கும் புண்யக்ஷேத்ரத்தில் வாஸம் ஸம்பாவிதமாகலாமே? தாகம் வாங்குவதில் ஆசையினுல் புண்யக்ஷேத்ரவாஸம் சிலருக்கு ஸம்பாவிதமாகலாமே? என்கிற ஸந்தேகம் உண்டாகாமைக்காக தர்மாத்மா என்கிறுர். தர்மத்திலேயே மநஸ்ஸை உடையவன் என்று அர்த்தம். இதனுல்

‘நாயம் தேஹோ தேஹபாஜாம் ந்ருலோகே
கஷ்டாந் காமாநர்ஹதி விட்புஜாம் யே ।
தபோ திவ்யம் புத்ரகா யேந ஸத்வம்
சுத்த்யேத்யஸ்மாத் ப்ரஹ்மஸௌக்யம் த்வநந்தம் ॥’

(பாகவதம் ஸ்க- 5) என்கிறபடியே இந்த மநுஷ்யதேஹமானது திர்யக்குகள் கூட அநுபவிக்கிற காமஸுகங்களை அநுபவிப்பதற்காக ஏற்பட்டதல்ல. அநந்தமான ப்ரஹ்மாநந்தத்தைக் கொடுக்கக் கூடிய தர்மங்களை அநுஷ்

ஸ்ரீ:

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை
(விரோதி--விக்ருதி)
ஸம்புடம் 9

ஸம்பாதகர்
P.S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர் M, A, B, L, சிரோமணி
(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்
நெ. 2. ஆதியப்பமுதலி தெரு. புரசவாக்கம்.
சென்னை 7

10 ஸஞ்சிகைகள் காஞ்சி ஸுதர்சன அச்சகத்திலும் 11, 12, ஸஞ்சிகைகள்
திருவள்ளூர் ஸ்ரீமாலோல முத்ராலயத்திலும் அச்சிடப்பட்டன

1950

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

விஷய ஸூசிகை

[அகராதி]

ஸம்புடம் 9.

விஷயம்	பக்கம்
ஆசார்ய குணகீர்த்தநம் ...	... 207
ஆசார்ய வைபவம் ...	... 362
ஆஸ்திக்யம் ...	181,287, 325, 339, 375
இராமானுசன் இன்னருள் ...	... 174
உத்தமராஜரின் உபதேசமும் ஸாத்விக ராக்ஷஸ நாகரீகங்களும்	... 144
உபய வேதாந்த ஐககண்ட்யம் ...	12, 76, 109, 140, 172, 204, 249,309,368
'என்னை மனங்கவர்ந்த ஈசன்' ...	... 234
க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் ...	... 16
கைமுதிக ந்யாய தத்வம் ...	... 389
கைமுதிக ந்யாய விசாரம் ...	... 341
சர்ச்சாலஹரி (ஸப்தோத்தித பராமர்சம்) ...	... 90
சிகையின் முக்யத்வம் ...	... 112
சிங்கப்பிரான் சீரேற்றம் ...	... 168
சில பழைய நினைவுகள் ...	... 239
சீர்திருத்தம் ...	... 143
தாயைப்பார்த்து மகளைக் கொள்ளு ...	... 200
தேசக்ஷேமம் ...	... 130
தேசிக ஸ்ரீஸூக்திகதசோத்யதூலவாதூலம் ...	... 346
நற்போதுபோக்கு	
ஆமை ...	... 343
தோழிகளின் சம்பாஷணை ...	211, 267
பெரியபிராட்டியார் திருவவதாரம் ...	... 43
பஞ்சாங்க ஸங்க்ரஹம் ...	25, 55, 92, 121, 134, 186, 210, 248, 266, 354, 367
பட்டர் பரவும் பரமன் ...	... 48
புயலும் பொறுமையும் ...	348, 383
புஸ்தகங்கள் வரவு	
அதிகரணார்த்தஸ்வரஸவிசாரம் ...	... 321
ஆசார்யவைபவப்ரகாசம் ...	... ,,

விஷயம் — பக்கம்

ப்ரமாணஸங்க்ரஹம் … … 321
மத்வபாஷ்யத்தில் 'ஊழ' சப்த விசாரம் … … ,,
மதத்ரய ஸாரஸங்க்ரஹம் … … ,,
மோக்ஷவிசாரம் … … ,,
யதிராஜசதகம் … … ,,
ஸ்ரீகோஸக ஸ்தவம் … … ,,
ஸ்ரீசார்ங்கபாணிஸ்தவம் … … ,,
ஸ்ரீதேசிகனும் அவருடைய ஸ்ரீஸூக்திகளும் … … 253
ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தவம் பாகம் 1 … … 321
,, ,, 2 … … ,,

புஸ்தக விமர்சம்

ஸ்ரீமத்பகவத்கீதை … … 127
ஸ்ரீவைஷ்ணவ தினசரி … … ,,

மதுராலாபம் … 26, 177, 215, 317
மதுவித்யா … … 89
மாதரிச்வ பதப்ரயோஜநம் … … 189
மாலோல முத்ராலயம் பற்றி ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள் … … 334
மோக்ஷவிசார விமர்சநம் … … 313
லோகார்த்தி நிவ்ருத்தி ப்ரார்த்தநா … … 237
வஸ்த்ரதாரணம் … … 379
வேதத்திலும் வேலைநிறுத்தம் … … 119
வேதாத்யயநம் … … 304
ஸ்ரீ ஆசார்யாப்யுதயம் … 159, 187, 224, 256, 329, 372
ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகள் … … 272
ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ் … … 78
ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம் … 2, 36, 68, 100, 132, 164, 196, 230, 262, 298 [335, 358
ஸகுணப்ரஹ்மநிர்ணயம் … … 39, 115, 151
ஸங்கல்ப மஹோத்ஸவம் … … 276
ஸந்த்யோபாஸநம் … … 8
ஹிந்துமதம் … … 71, 103, 135

செய்திகள்

அத்திப்பட்டு ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் … 392
ஆஸ்திக்யம் என்னும் வ்யாஸத்தைப்பற்றி ப்ரஹ்மஸ்ரீ நடேச சாஸ்த்ரிகளின் கடிதம் … … 221

விஷயஸூசிகை

ஆஸ்திகஸபை. கோடம்பாக்கம் 57,93

ஒரு தார்மிகரின் மறைவு 32

கல்கத்தாவில் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்
திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 353

கல்கத்தாவில் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம் ... 323

திருக்குடந்தையில் வேதபாராயணமும் திருவத்யயனோத்ஸவமும் ... 94

திருச்சேறையில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம் 323

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம் 58,124,291

தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் மண்டலாபிஷேக மஹோத்ஸவம் 255

பண்ணுருட்டி ஸ்ரீமஹாராதகம் 94

ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருநக்ஷத்ர மஹோத்ஸவ வைபவங்கள் ... 93

ஸ்ரீ அழகியசிங்கர்களின் மஹோத்ஸவங்கள் 57

ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப
ஸ்ரீயதீந்த்ரமஹாதேசிகனின் 9-வது திருவாராதந மஹோத்ஸவம் ... 353

ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 356

ஸ்ரீ ஆழ்வார் ஸபை. அவளூர் 291

ஸ்ரீ.உ.ப.வாஸுதேவாசாரியஸ்வாமியின் ஆப்தீகம் ... 223

ஸ்ரீக்ருஷ்ண ஸபா. மாதுங்கா. பம்பாய் 122

ஸ்ரீகல்யாணபுரம் அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் ... 157

ஸ்ரீகல்யாணப்ரவர்தநீ ஸபா மதுராந்தகம் 22,60

ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் அவதாரமும் ஸீதாகல்யாணமும் ... 221

ஸ்ரீசக்ரவர்த்தி திருமகன் பட்டாபிஷேக மஹோத்ஸவம் ... 255

ஸ்ரீதசாவதார ஸந்நிதி திருமங்கை மன்னன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 393

ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கரின் 36 வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 59

ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கரின் வார்ஷிக ஆராதந மஹோத்ஸவம் 190

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் 255

ஸ்ரீதேசிகன் சாத்துமுறையும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணமும் 322

ஸ்ரீபாஷ்ய சாத்துமுறை மஹோத்ஸவம் 392

ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 156

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி ஸ்ரீ ஸ்ரீநிவாஸமஹாதேசிகன் ஐந்தாவது வார்ஷிக
ஆராதந மஹோத்ஸவம் 156

ஸ்ரீமந் நாதமுநிகளின் ஆச்ரமம் 220

ஸ்ரீராமகாநாமுத பாராயணம் 32

ஸ்ரீராமகாநாமுத ஸமர்ப்பணோத்ஸவம் 223

ஸ்ரீராமநவமி பங்குனி உத்திர மஹோத்ஸவங்கள் ... 123

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸபா பம்பாய் 123,220

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம ஸபா தேரழுந்தூர் 57, 93

ஸ்ரீவைஷ்ணவ ஸபை, கரூர் 393

ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் பம்பாய் 61

ஸ்ரீ ஸ்வர்ணம்ஸ்வாமியின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் ... 219

ஸம்பாதகரின்குறிப்புகள் 31,62,125,161,192,226,258,294,331,355,394

டிப்பதற்காகவே ஈச்வரனால் கொடுக்கப்பட்டது என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை உணர்ந்தவனாகையினாலே, 'உண்டியே உடையே உகந்தோடும் இம்மண்டலத்தொடும் கூடுவதில்லை யான்' 'மாரனார் வரிவெஞ்சிலைக் காட்செய்யும் இப்பாரினாரொடும் கூடுவதில்லை யான்' என்கிறபடியே அர்த்த காமங்களை அனாதரித்து தர்மாநுஷ்டாநத்திலேயே நிலைபெற்ற நெஞ்சுடையவனாக இருந்தான் என்கிறார். தர்மத்திலேயே மனமுடையவன் என்று சொன்னதால் அவன் மனத்தில் பாபவாஸனைகூட இல்லை என்று சொல்லப்பட்டதாகிறது.

இப்படி முத்கலன் மனஸ்ஸானது தர்மாநுஷ்டாநத்தில் நிலைபெற்றிருந்தாலும் 'ஹராக்ஷீ வாமீ' என்கிறபடியே ஶப்தாதி விஷயாநுபவமே ஸ்வபாவமாக உடையவைகளான இந்த்ரியங்களோடிருக்கையாலே அவைகளைக் கொண்டு தர்மாநுஷ்டாநம் பண்ணுவது ஸம்பாவிதமோ? என்கிற சங்கைக்கு பரிஹாரார்த்தமாக 'ஸம்யதேந்த்ரிய:' என்கிறார். ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற ஆத்மக்ஷேமார்த்தங்களான தர்மாநுஷ்டாந விஷயத்தில் மஹாவிச்வாஸமாகிற ஆஸ்திக்ய பலத்தினாலே விஷயாநுபவஸ்வபாவங்களான இந்த்ரியங்களையும் கூட தர்மாநுஷ்டாநத்தில் நிலைபெற்ற நெஞ்சுக்கு வசமாக்கிவிட்டான் என்கிறார்.

ஆனாலும், 'ஸ்வபாவோ துரதிக்ரம:' என்கிறபடியே இந்த்ரியங்களுடைய விஷயாநுபவ ஸ்வபாவத்தை மாற்ற முடியுமோ? ஆகையினாலன்றோ- 'விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறுமைம்புலனிவை' என்கிறது என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக முத்கலன் இந்த்ரியங்களைத் தன் மனத்துக்கு வசமாக்கின உபாயத்தைச் சொல்லுகிறார் 'ஸிலோஞ்சவ்ருத்தி:' என்று. காடுகளில் யாத்ருச்சிகமாக கீழே விழுந்த நெல் முளைத்து விளைந்து இருந்தால் அந்த நெற்கதிர்களைப் பொறுக்கிச் சேர்த்து ஜீவிப்பதாகிற ஸிலம் என்கிற ஜீவனோபாயத்தையும் அது கிடைக்காத காலத்தில் தார்மிக ஜனங்கள் குடியிருக்கும் வீட்டின் வாசலில் நின்று பிக்ஷை கேட்டு வாங்கி ஜீவிப்பதாகிற உஞ்சவ்ருத்தியையும் உபாயமாகக்கொண்டு இந்த்ரியங்களை ஜயித்துவிட்டான் என்கிறார். 'ஐந்த்ரியாணி ஜயத்யாஶு நிராஹாரா மநீஷிண:' என்கிறபடியே பூர்ணமான ஆஹாரத்தை புஜித்த இந்த்ரியங்களுக்கு புஷ்டியை உண்டுபண்ணாமல் தேஹம் தரித்திருப்பதற்கு அபேக்ஷிதமான அத்யல்பமான ஆஹாரத்தை புஜித்து இந்த்ரியங்களை ஜயித்துவிட்டான் என்கிறார். அங்ஙனன்றிக்கே தர்மாத்மா ஸிலோஞ்ச வ்ருத்தி: என்று இவ்விரண்டு பதங்களின் சேர்க்கையின் ஸ்வாரஸ்யத்தினால் தர்மாத்மாவாக இருக்கையினாலே ஸிலோஞ்சவ்ருத்தியாக இருந்தான் என்று சொல்வதும் உசிதமாகும்.

தர்மாத்மாவான இந்த முத்கலனைக் குறித்து மேலே 'ஸத்ய ஸந்த:' என்று சொல்லுகையாலே விசேஷதர்மாநுஷ்டாநத்தில் ஆஸ்தையினாலே க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்து பத்நீ புத்ராதி பந்து வர்க்கத்தோடிருக்கையினாலே

'வ்ருத்தௌ ச மாதாபிதரௌ
ஸாத்வீ பார்யா ஸுத: ஶிஶு: |
அப்யகார்யஶதம் க்ருத்வா
பர்தவ்யா மநுரப்ரவீத் ||'

என்கிறபடியே அகார்யசதங்களை அநுஷ்டித்தாவது அதிக தநங்களை ஸம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்றவேண்டியதே உசிதமாக இருக்க

'ஜநயேத்ர ப்ராஹ்மணஸ்யைஷ:
யதி தநிவயோ ஜேஹாநு |
ஶ்ரியாஹ்ய்ருதீக்ஷ்ணம் ஸம்வாஸோ
உபர்யேதம் ஸம்மோஹயேத ||'

[ப்ராஹ்மணனிடம் அதிகமான தநமிருந்தால் அந்த தநமானது ப்ராஹ்மணனுக்கு கர்வத்தை உண்டுபண்ணுவதோடு அவனுடைய புத்தியைக் கெடுத்து மோகத்தையுமுண்டுபண்ணும்.]

'ப்ராஹ்மணேஷு ச மூடேஷு
தர்மோ விப்ரணஶேத் த்ருவம் |
தர்மப்ரணாஶே பூதாநாம்
அபாவ: ஸ்யாந்ந ஸம்ஶய: ||'

[ப்ராஹ்மணனுக்கு மோஹமுண்டானால் தர்மம் நாசத்தை நிச்சயமாக அடையும். தர்மம் நஷ்டமாகி விட்டால் ஸர்வப்ராணிகளும் நாசமாகி விடுமென்பதில் ஸந்தேஹமில்லை.] (தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆண்டாள்

நிக்ரஹ மறியாத நிலமகள்

[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வோகேட், சென்னை.]

கோதா ஸ்துதியில் தேசிகன் ஆண்டாளைக் குறித்து 'ஸாக்ஷாத் க்ஷமாம்' என்றும் 'கருணயா கமலாமிவாந்யாம்' என்றும் அருளிச்செய்திருக்கிறார். பூமிப்பிராட்டியாரின் அவதாரமாகையாலே 'ஸாக்ஷாத் க்ஷமாம்' என்று பேசியபடி. கருணையாலே கமலையென்னும்பெரியபிராட்டியாரின் ரூபாந்தரமாகவும் ஆண்டாளை நிர்தேசிக்கலாமென்பது ஸ்வாமியின் திருவுள்ளம். பெரியபிராட்டியாரை 'அநுக்ரஹமயீம்' என்றும் 'அஜ்ஞாத நிக்ரஹாம்' என்றும் யதிராஜஸப்ததி இரண்டாவது ச்லோகத்தால் காட்டிக்கொடுத்திருக்கிறார். 'அஜ்ஞாத நிக்ரஹா' என்னும் அம்சத்தை சிறிது அநுபவிக்கவேண்டுமென்பதே இச் சிறு கட்டுரையின் நோக்கு.

பெருமாள் அவதாரத்திற்கு மூன்று முக்ய காரணங்கள் பெருமாள் திருவாக்கினாலேயே பேசப்பட்டிருக்கின்றன. ஸாதுபரித்ராணம், துஷ்க்ருத்விநாசம், தர்மஸம்ஸ்தாபனம் என்பன அவை. பகவல்லீலைகளை அநுபவிப்பதிலே மிகுந்த ராஸிக்யமுடைய ஆழ்வார்கள் அவதாரங்களிலே எம்பெருமான் செய்தருளிய பல சத்ருநிரஸனோபாக்யானங்களைக் கையாளுகிறார்கள் என்பது திவ்யப்ரபந்தங்களை அநுஸந்திப்போருக்கு நன்கு விளங்கும். கோதாப்பிராட்டி அம்மாதிரி நிரஸநஸாமர்த்தியத்தை பேசியின்புறுங்கால் அவ்வருளிச்செயல்களில் ஒரு விலக்ஷண அம்சம் திகழக் கிடக்கிறது. திருப்பாவையில் பலவிடங்களில் பிராட்டியின் பாசுரங்களைப் பராமர்சிக்குங்கால் வேண்டுமென்றே செய்யப்பட்ட பதப்ரயோகங்களால் நிக்ரஹத்தை அநுக்ரஹமாகவே பேசுவதில் நோக்குடையவளாகக் காண்கிறாள் ஆண்டாள். தண்டனையும் ஒரு க்ஷேமகார்யமென்று தயாசதகத்தில் காட்டப்பட்டிருக்கிறது. 'ஜநித ஸுகதிம் தண்டநகதிம்' என்ற அந்தபங்க்திக்கு இணங்க பெருமாள்செய்தருளிய நிரஸநங்களையெல்லாம் நிரஸநங்களாக்கமாட்டாமல் அநுக்ரஹகார்யங்களாகவே காட்டிக்கொடுக்கிறாள். 'செற்றார் திறலழியச் சென்று செருச்செய்'வதில்தான் பெருமாளுடைய முக்கிய நோக்கு என்பதை அவனுடைய திருவுள்ளத்தின் சுவடறிந்த இக் கோதாப்பிராட்டி அழகிய அருளிச்செயல் மூலமாக நமக்குக் காட்டிக் கொடுக்கிறாள். செற்றார் அழியச் செருச் செய்தவனைக் காட்டாமல் செற்றார்திறலைமட்டும் அழிப்பதில் உத்யோகிப்பன் என்பது விளங்குகிறது. அப்படியே மாற்றாரை மாற்றழிக்கவல்லான் என்று பாடுகிறாள் பிராட்டி. அவன் மாற்றாரை அழிப்பதில்லையாம். அவர்களுக்குள்ள மாற்று, அதாவது விரோதபாவம், அதுஒன்றைத்தான் அவன் போக்க விரும்புவது. இன்று மாற்றாராயிருப்பார் நாளை தம் வலி தொலைந்து நம் வாசற்கண் ஆற்றாது வந்து நம் அடிபணிவார் என்றிறே அவன் ஆசைப்படுவது. அந்தத் திருவுள்ளத்தை அடியொற்றி அபலைகளாகிய நாங்களும் அவ்வண்ணமே அணுகினோம்காண் என்று பாடுபவளாய்

'மாற்றாருனக்கு வலி தொலைந்துன்வாசற்கண்
ஆற்றாது வந்துன்னடி பணியுமாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்து'

என்று பாசுரமிடுகிறாள். அவன் சீர் அத்தன்மைத்து என்பதை 'கூடாரை வெல்லுஞ் சீர்' என்று 27-ம் பாசுரத்தால் காட்டிக்கொடுக்கிறாள் கோதை. அவன் திருவாயுதங்களும் மாற்றாரை அழிக்கமனமில்லாமல் பகைவரை அழிக்காமல் அவர்கள் பகையைமட்டும் கெடுக்குமவை என்பதை 'வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல்போற்றி' என்ற வாக்யத்தால் அநுபவிக்கிறாள். பெருமாள் காகத்தின் மேல்

எவிய சரம், பெருமாள் எழுந்தருளியிருக்கும் திக்கைவிட்டு காகம் ஓடும்போது சீறித் தொடர்ந்தும், அவனது ப்ரமணத்தில் (சுற்றி வருவதில்) பெருமாளிருக்கும் திக்கைநோக்கி வரும்போது கால்தாழ்ந்தும் 'உனக்குச்சரண் ஸர்வசரண்யனான காகுத்தன்தான்' என்று காட்டிக்கொடுத்ததாம். இந்த ரஹஸ்யத்தை ஸ்வாமி தேசிகன் அபயப்ரதானஸாரத்திலே நமக்கு வெளியிடுகிறார். ஆர்த்ராபராதியான காகம் பிழைக்கவும் அவன் பகை கெடவும் அவன்மேலேவப்பட்ட அஸ்த்ரம் தானே காரணம். அதைக் கருத்தில்கொண்டு 'வென்று பகை கெடுக்கும்' என்று வெகு ரஸமாக ஆண்டாள் அருளிச்செய்வதை அனைவரும் அநுபவிக்கவேண்டும்.

பெரிய வதங்களாகக் கருதப்பட்ட மூன்று வ்ருத்தாந்தங்களைத் திருப்பாவையில் காண்கிறோம். அவைகள் முறையே (1) கும்பகர்ண வதம் (10-ம் பாட்டில்) (2) ராவணவதம் (12-ம் பாட்டில்) (3) கம்ஸவதம் (25-ம் பாட்டில்) என்று காண்கிறோம். ஓரிடத்திலாவது பெருமாள் அவர்களை வதம் செய்ததாக அல்லது கொன்றதாகப் பேசுகிறாளில்லை பிராட்டி. 'நாற்றத்துழாய் முடி நாராயணன் நம்மால் போற்றப்பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணன்' என்று காட்டப்பட்டிருக்கிறது. அவனுடைய அழிவுக்குக் காரணம் அவனேயன்றி பெருமாள் இல்லை. அவனை அழிக்கவேண்டாம் என்ற திருவுள்ளத்தோடு விபீஷணாழ்வானையும் தூதுவிட்டுத் தம்பக்கல்சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றுதான் பெருமாள் ப்ரயத்நம் என்றும், அப்பிரயத்நத்தை நிஷ்பலமாக்கிவிட்டு நாசமடைந்தது பெருமாள் தவறல்ல. அவள் நம்பெருமாள் அவனைக் கொல்லவில்லை வென்றும்காட்ட முற்பட்டே 'கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணன்' என்று அருமையான பத ப்ரயோகம் செய்திருக்கிறாள். 12-ம் பாசுரத்தில் பேசப்பட்ட ராவணவதமும் வெகு சித்திரப்பாடுடனே இவ்வுண்மையை விளக்குவதாக அமைந்திருக்கிறது. 'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்' என்று பாடப் பெற்றிருப்பதால் ராவணன் மடிந்தது பெருமாள் சரத்தால் அல்ல, பெருமாளின் சினத்தால் தான் என்று உணர்த்தப்பட்டிருக்கிறது. சரத்தால் வெல்ல வேண்டுமென்றால் முதல் நாள் போரிலேயே வென்றிருக்கலாமல்லவா? இன்றுபோய் போருக்கு நாளை வா என்று கம்பீரமாகப்பேசி ஒரு ஆயுதம் ஒருஅவலம்பமில்லாமல் நின்றவனைக் கொல்லாது விடுத்தது அவன் அதனால் நல்வழிப்பட்டு சரணாகதனாக அல்ல, — பெருமாள் பிராட்டி இவர்கள் திருவுள்ளத்தின்படி மித்ரனாக — வரமாட்டானா என்ற பண்பினால்தானே. அதற்கிணங்காமல் மீண்டும் பெருமாளுடன் எதிரம்பு கோத்ததுமன்றி திருவடி முதலிய முதலிகளை ஹிம்ஸித்து வந்ததால் 'கோபமாஹாரயத் தீவ்ரம்' என்றகணக்கில் சினத்தை எறிட்டுக்கொண்டுதான் ராவணனை முடித்தது. ஆகையால் இங்கேயும் ராவண வதத்திற்கு ராவணனே தான் காரணமென்று காட்டி அவ்விஷயத்தில் பெருமாள் செய்த நிக்ரஹத்தை மறைத்துப் பாசுரமிடுவதுபோல் சொற்றொடர்கள் அமைந்திருக்கின்றனவென்பது நோக்கத்தக்கது. அப்படியே 15-ம் பாசுரத்தில் கம்ஸ ப்ரஸ்தாவம் வரும்போது அவனது கருத்தைப்பிழைப்பித்து அவன் வயிற்றில் நெருப்பென்ன நின்றதாக பாடப்பட்டிருக்கிறது. இது வெகு விசித்ர வேலை. 'பிழைப்பித்து' என்ற சொல்லுக்கு இரண்டு பொருளுண்டு. 'தவறாக்கி' என்பது ஒரு பொருள். 'உய்வித்து' என்பது மற்றொரு பொருள். இரண்டு பொருளும் இங்கே நினைக்கப்படவேண்டும். தீங்குநினைத்த அவன் கருத்தைத் தவறாக்கினான். அதாவது அவன் நினைத்த தீங்கை நிறவேறவொண்ணாமல் செய்தான் என்று ஒருபொருள். 'காமாத் கோப்யஃ பயாத் கம்ஸஃ' என்ற பாகவத ச்லோகத்தின்படி அந்தக்கருத்து அவன் நினைத்த தீங்கினாலேயே அவனது நீண்ட நன்மைக்குக் காரணமாகியது. ஆகையால் அது அவனையே உயிர்ப்பித்தது. இன்னுமொரு அழகான த்வந்யர்த்தம் தோன்றுகிறது. 'நெருப்பென்ன நின்றான்' என்றபோது கொடுமையும் கடுமையும் தோன்றினாலும் 'வயிற்றில் நெருப்பென்ன நின்றான்' என்பதாலே

நலம்பயக்கும் அக்நியாகவே எம்பெருமான் பேசப்பட்டிருக்கிறான் என்று கொள்ளல் வேண்டும். வயிற்றில் அக்நி குறைந்தபோதல்லவா மனிதனுக்கு தோஷம் ஏற்படுகிறது. அக்நிமாந்த்யம் என்பது உடலைப் பீடிக்கும் ஒரு வ்யாதி. ஓரளவில் வயிற்றில் நெருப்பு இருக்கவேண்டும். அதற்கு ஜாடராக்நி என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கஞ்சன்வயிற்றில் நெருப்பென்ன நின்ற 'நெடுமால்' என்றவிடத்து கருத்தைப்பிறழப்பித்த (உய்ப்பித்த) அநுக்ரஹமே சொல்லினால் தோன்றும்படி சித்ரக்கவி அமைந்திருக்கிறது.

இப்படி ப்ரபந்தம் முழுவதும் கோதையின் திருவுள்ளம் பெருமாளுடைய ஸகல காரியங்களிலும் அநுக்ரஹமே முக்ய நோக்கு என்பதை வற்புறுத்த வேண்டி அத்புதமாய்ப் பாடல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவள் சீர் அவள் சத்ருக்களையும் வென்று அவன்பால் படும்படி செய்வது ஒருபுறமிருக்கட்டும். அவனுடைய அச்சீரை இச்சிறுமி பாடியிருக்குமழகு விஷயப்ரவணர்களாயிருக்கும் நம் மனத்தில் தேனும் நற்பாலும் கன்னலுமொருங்கே பெய்தாற்போல் அளவிறந்த இன்பச்சுவையைத் தந்து நம்மைத் தம் வசப்படுத்துகின்றன என்றபோது இவள் பாடலை எவ்வளவு பயின்றாலும் திகட்டாது என்ற பொருளை இக்காலத்தில் நாம் கண்கூடாகக் காண்கிறோம். 'எத்தனை யிடங்களில் திருப்பாவை காலக்ஷேபம் திருப்பாவை உபந்யாஸம்' என்று எண்ணும்போது ஆஸ்திகர் உள்ளமெல்லாம் இன்புறுகிறது. கோதையினின்னருளால், அவள் பாராட்டும் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமால் திருவருளால் திருப்பாவையின் பெருமை ஓங்கி வளர்ந்து அதைப் பயிலுவோர்க்கு நீங்காத செல்வம் நிறைந்து அவர்கள் எங்கும் இன்புறுவார்கள் என்று பெரியோர்களெல்லாம் மங்களாசாஸநம் செய்யவேண்டும்.

19942

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அர்த்தோதய மஹோதய தத்வம்

(இவ்வருஷம் தை-மீ 23உ மஹோதயம் உண்டா? இல்லையா? என்று கேட்டு அவைகளைப்பற்றி எழுதப்பட்ட சில சங்கைகளுக்கு பண்டிதர்கள் சொல்லும் ஸமாதானத்தை கீழே வெளியிடுகின்றோம்)

வைத்யநாத தீக்ஷிதீய ச்ராத்தகாண்டம் க்ரந்தலிபி 335ம் பக்கத்தில் சூடாமணி யோக விசேஷ: என்று அர்த்தோதயமஹோதயத்தைப்பற்றி விஸ்தாரமாக எழுதியிருக்கிறது. உதயத்தில் ச்ரவண மில்லவிட்டாலும் பாரத வசநப்படி மஹோதயமுண்டென்பதை கவனிக்கவும்.

தோழப்பர் ஸ்ம்ருதிவிலோசநம் தெலுங்கு லிபி 277 வது பக்கத்தில் திதி, நக்ஷத்ர, வார, யோகத்தினால் செய்யப்படும் ச்ராத்தம் காம்யமென்று இருப்பதனால் மஹோதய தர்ப்பணம் காம்யமென்று தோன்றுகிறது. ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்நாநம் மாத்திரம் செய்வதுண்டு தர்ப்பணம் பண்ணுகிற வழக்கமில்லை. ஆகையினால் பித்ரு ச்ராத்தம் வந்தால் அதை அநுஷ்டிக்கலாம் என்று தோன்றுகிறது.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான்
ஸ்ரீரங்கம்.

அர்த்தோதய மஹோதயம் என்பது ஹவிர்யாகாதிகளைப்போல அப்ரபந்நர்கள் விஷயம். காம்ய ச்ராத்தம் உண்டு. அது ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்யவேண்டியதில்லை. அநுஷ்டாநமும் கிடையாது. ப்ரத்யாப்தீக ச்ராத்தம் வந்தால் காம்ய ச்ராத்தம் செய்யவேண்டியதில்லை. ரதஸப்தமி முதலியவைகள் போல விசேஷ புண்யகாலமுண்டு. ஸ்நாநம் ஸமுத்ரஸ்நாநம்.

சுசாரணெ வ்ருத்வாயம் கிடையாது (செய்யா விடில் தோஷமில்லை) ஞாயிற்றுக்கிழமையோடு நான்கு சேர்ந்தால் அர்த்தோதயம் திங்கட்கிழமையோடு நான்கும்சேர்ந்தால் மஹோதயம்.

ப்ராதக்காலத்தில் சேருவதுதான் விசேஷம் இது அநிஷித்த காம்யமாகையால் எல்லோருக்குமே விசேஷம்தான். இதற்கு ப்ரமாணங்கள் 'நிர்ணயஸிந்து' 'தர்மஸிந்து' வைதிக ஸார்வபௌமருடைய க்ரந்தம் 'வைத்யநாதீயம்' 'கோபால பாஷ்யம்' முதலிய கோசங்களில் காண்க. ஆனால், 'பெநகொவிவிஃ யஸ்யைதா புராணம்' என்கிற யக்ஷப்ரச்ந வசனப்படி பலவிதமாக சொல்லப்பட்டிருந்தாலும் பெரியோர்களுடைய அநுஷ்டானமே ப்ரமாணம். திங்கட்கிழமை பர்வம் வந்தபிறகு ஸ்நானம் மாத்திரம் விசேஷம்.

இவ்வருஷம் அர்த்தோதய மஹோதயமிரண்டுமில்லை. ஏனென்றால், விபவ, ப்ரஜோத்பத்தி, ஸர்வஜித், முதலிய வருஷங்களில் முன்பு அநுஷ்டிக்கப்படவில்லை.

வெங்கடாசார்ய ஸ்வாமி. தில்லையம்பூர்.

•1 அர்த்தோதய மஹோதயங்களுக்கு புண்ய காலத்வமுண்டு. இதற்கு ப்ரமாணங்கள். ஸ்ம்ருதிரத்நாகரத்தில் ஸம்ஜ்ஞாப்ரகரணத்தில் அத்ரியினுடைய வசநமான 'அமாவாஸ்யா வ்யதீபாதே அர்த்தோதய மஹோதயௌ | ... விஜ்ஞேயஃ கோடிஸூர்ய க்ரஹைஸ்ஸமஃ ||' என்பதால் அர்த்தோதயத்திற்கு புண்யகாலத்வமுண்டென்று தெரிகிறது.

'அமாவாஸ்யா து ஸோமேந' என்ற ஆத்ரேய வசநத்தினால் அமாவாஸ்யையும் திங்கட்கிழமையும் சேர்ந்தால் புண்யகாலமென்று ஏற்படுகிறது.

ஷை திதி வார யோகம் இருந்தால் அர்த்தோதயத்திற்கு சொல்லியுள்ள வாரபிந்நமான யோகமும் இருந்தால் மஹோதயமென்று ச்ராத்தகாண்டத்தில் 'ஸங்க்ரஹே' என்று எடுத்திருக்கிற 'பூர்வஸ்யாஞ்ச' என்கிற ச்லோகத்தில் மஹோதயத்திற்கு புண்யகாலத்வம் உண்டென்று நன்கு விளங்குகிறது.

2. புண்யகாலமானதால் ஸ்நாநம் மாத்ரம் செய்வதுண்டு. காம்ய ஸ்நாநமானதால் ப்ரபந்நர்கள் செய்யவேண்டாமென்று ஏற்படுகிறது.

இவ்வருஷம் மஹோதய புண்யகாலம் உண்டென்று ஷை ப்ரமாணங்களினால் ஏற்படவில்லை.

3. அர்த்தோதயாதிகளில் செய்யும் ச்ராத்தம் காம்யமென்று விதர்யேயஸாரே—'த்ரிம்சத்யாதிஷு ... ஸர்வம் ... யாதிஷு || ... யோகேஷு ... காம்யம் ஸமாசரேத் ||' என்கிற ச்லோகத்தினால் ஏற்படுகிறது. ஷை ச்லோகத்தினால் 'ஸோமாதீநாம் காம்யகம் ... தவ்யம், ... விதி ... தவிஷயகவாக என்று ஆரம்பித்து திதி, வார, நக்ஷத்ர யோக ... காம்யாநீத ... ' ... அலப்யயோகமான கார்யங்கள்.

ச்ராத்தகாண்டத்தில் தர்சாதி ச்ராத்தவிதி ப்ரகரணததில் ... ஸம்க்ரஹஃ என்றிருப்பதால் அலப்யயோகமென்பது அர்த்தோதயாதிகளைச் சொல்லுகிறதென்று தெரிகிறது. ஆகையால் இந்த ச்ராத்தம் காம்யமானதால் காம்யாநுஷ்டானம் வேண்டாமாகையால் நித்யமான அமாதர்ப்பணம் ஒன்றுதான் செய்யவேணும். வைத்யநாதருடைய பக்ஷத்தில் அலப்யயோகமான அர்த்தோதயாதி தர்ப்பணம் ஒன்று தர்ச அலப்யயோகங்களுடைய சேர்க்கையில் அநுஷ்டிக்கவேண்டும்.

காம்யாதிஷ்வபி ... நித்யஸ்ய ... யோஃ என்றும் தார்சிகஅல்ப்யயோகமென்

[illegible] என்றும் [illegible] இதி அலப்யயோக தர்ப்பணமேசெய்யமேணுமென்று சொல்லியிருக்கிறது. அர்த்தோதயச்ராத்தமானது அமாவஸ்யை யோகமுள்ளதென்று எடுத்திருப்பதால் [illegible] என்கிற வசநத்தினுல் உத்பத்தியை யனுஸரித்து பண்ணவேண்டுவதாகயிருக்கிறது.

வடூர். புராணம். ராமபத்ராசார்யர்.

ஆராதகர். ஸ்ரீஅஹோபிலமடம். திருவள்ளூர்.

*   *   *   *

தைமாதத்து அமாவாஸ்யைதிநத்தில் ஞாயிற்றுக்கிழமை, வ்யதீபாதம், ச்ரவணநக்ஷத்ரம் சேர்ந்தால் அர்த்தோதயம் என்பதாகவும், திங்கட்கிழமையும் முன்கூறிய யோகமும் ஏற்பட்டால் மஹோதயமென்றும் சில ஸ்ம்ருதிகளில் விபரகம் காண்கிறது. ‘[illegible]’ என்பதாக மஹாபாரத வசநம். வைத்யநாதீயத்தில் ச்ராத்த காண்டத்தில் உதாஹ்ருதமாயுள்ளது. இதே விஷயத்தைப் பற்றி ஸங்க்ரஹதிலுள்ள மற்றொருப்ரமாணமும் அங்கே காண்கிறது.

‘[illegible]’ என்று

தைமாதத்து அமாவாஸ்யைதிநத்தில் திங்கட்கிழமை, ச்ரவணநக்ஷத்ரம், இவை சேர்ந்தால் மஹோதடமென்று இதனுல் தெளிவாகிறது.

‘[illegible]’ என்பதாக முன் உதாஹ்ருதமாயுள்ள ச்லோகத்தின் நான்காவது பாதம் ‘[illegible]’ என்பதாகச் சிலர் சொல்லுவதாகவும் நிர்ணயஸிந்து, தர்மஸிந்து, இவைகளில் உள்ளது.

இவற்றின்படி இவ்வருஷம் தைமாதம் 23வ அமாவாஸ்யை, திங்கட்கிழமை, ச்ரவணம் இவைகள் சேருமதால் மஹோதய புண்யகாலத்தை மறுப்பதற்கில்லை.

தோழப்பர் ஸ்ம்ருதிரத்னகாத்தில் அர்த்தோதயத்தை மாத்திரம் குறிப்பிடுகிருர். மஹோதயத்தைப் பற்றி ப்ரஸ்தாபிக்கவில்லை. நிர்ணயஸிந்துவிலும் மஹோதயத்தை இசயவில்லை. ஆகிலும் அர்தோதயத்துக்கு ஆகரம் காட்டியவிடத்தில் அந்த வசனத்திலேயே நான்காவது பாதமானது மஹோதயத்தைச் சொல்லுவ்தாக தர்மஸிந்து நிர்ணயஸிந்துக்களில் சொல்லியிருப்பதையும் நிரூபிக்கவேண்டியிருக்கிறது.

தீக்ஷிதருடைய ஸ்ம்ருதிமுக்தாபலத்தில் மஹோதயத்திற்கு மஹாபாரத வசநமும், ஸங்க்ரஹ வசநமும் உதாஹரணம் செய்திருப்பதையும் இசையவேண்டியிருக்கிறது.

இவற்றின்படி இவ்வருஷம் தைமீ மஹோதய புண்யகால முண்டென்று ஏற்படுகிறது.

ஸ்நாந தர்பணுதிகளைப்பற்றி மேற்கூறிய ஸ்ம்ருதிகளில் விசேஷமும் தெளிவாகிறது.

‘[illegible]’ என்றும் சாண்கிறது. அன்று தர்சச்ராத்தத்தைத் தவிர்த்து மஹோதய ச்ராத்தமென்று தனித்துச் செய்யவேணு மென்பதாக ஏற்படவில்லை. தர்மஸிந்து, நிர்ணயஸிந்து முதலிய நிபந்த க்ரந்தங்களில் ஸ்நாந, தாநங்கள்மாத்திரமே அன்று காண்கிறது.

அன்று செய்யும் ச்ராத்தமும் பித்ருக்களுக்கு அநேக ஆயிரம் வருஷத்தில் செய்யும் ச்ராத்தங்களாலுண்டாகும் த்ருப்தியை யளிப்பதாக வைத்யநாதீயத்தில் உள்ளது. அன்று செய்யும் தர்சச்ராத்தமே அத்தகைய பலத்ததாகக் கொள்ளலாம். வேறு ச்ராத்தம் செய்யவேணுமென்று ஏற்படவில்லை.

அன்று ப்ரத்யாப்திக ச்ராத்தம் நேரிடுமானால் தேவதாபேதமிருப்பதால் தர்சச்ராத்தமும் ப்ரத்யாப்திகமும் இரண்டும் செய்ய வேண்டும். முதலில் ஆப்திகமும் பிறகு தர்சச்ராத்தமும் என்பதாக தர்மஸிந்து முதலியவற்றி லுள்ளது.

மேற்கண்ட புண்யகால ஸ்நாநாதிகளை உதய காலத்திலேயே செய்யலாம். தர்சச்ராத்தத்தை விஹிதமான குதபகாலத்தில் அநுஷ்டிப்பது உசிதம். அர்தோதய மஹோதயங்களில் தனித்து ச்ராத்தம் செய்யவேணுமென்று தெரியவில்லை. தர்சச்ராத்தமே போதுமானது. ஆகவே மஹோதய ச்ராத்தமானது நித்யமா? காம்யமா? இத்யாதி ஆசங்கைக்கு அவகாசம் இல்லை.

96 ச்ராத்தங்கள் நித்யங்களென்பதாக ஸ்ம்ருதிகளில் உள்ளன. அவையாவன:— அமாவாஸ்யை (12) யுகாதி (4) மந்வாதி (14) ஸங்க்ராந்தி (12) த்ருதி (12) மஹாளயம் (15) அஷ்டகை (5) அந்வஷ்டகை (5) அஷ்டகைக்கு முந்திய தினம் (5) வ்யதீபாதம் (12)

இவற்றில் அர்தோதயமஹோதய ச்ராத்தம் சேராமையால் நித்யமென்பதற்கில்லை. தர்சச்ராத்தத்தைத் தவிர்த்துத் தனித்து மஹோதய ச்ராத்தமென்பது ஏற்படவில்லை.

அடியேன் நிரூபணம் செய்ததில் தோன்றியதை நியமநத்தின்படி எழுதினேன். 'ஸமுத்ரஸ்நாநவிதி' என்பதாக ஸ்ம்ருதிரத்நாகராதிகளில் சொல்லியுள்ள ஸமுத்ரஸ்நாநம் செய்யவேண்டும்.

தி. ஈ. வீரராகவாசார்யர்

ஸம்ஸ்க்ருத காலேஜ். திருவையாறு.

செய்திகள்

ஸ்ரீக்ருஷ்ண ஸபா, மாதுங்கா, பம்பாய்

இப்பவம் சென்ற ஆடி மீ 31ம் உ செவ்வாய்க்கிழமை ஸ்ரீஆண்டாள் திருவாடிப்பூர மஹோத்ஸவம் ஸேவை, சாற்றுமுறை, ஸம்பாவனைகளுடன் விசேஷமாக நடைபெற்றது.

ஸ்ரீக்ருஷ்ண ஜயந்தி உத்ஸவம் நெ. 10 பிரஹ்மணவாடியில் ப்ரத்யேகமாய் அமைத்து அலங்கரிக்கப்பட்ட பந்தலில் 4-9-1950ல் உபக்ரமித்து (ஸ்ரீபாகவத) ஸப்தாஹ வேதபாராயணங்களுடன் காலை, மாலை வேளைகளில் திருவாராதநமும், இரவில் உபந்யாஸங்களும், ஹரிகதா காலக்ஷேபம், ஸங்கீதகச்சேரிகளும் 10-9-1950 வரையில் வெகுவிமர்சையாக நடந்தேறியது. சென்னை ஸ்ரீ. உப. வே. பி. என். ஸ்ரீநிவாஸாசாரியர் (MA PhD) ஸ்வாமி ப்ரதி தினமும் ஸாதித்த வேதாந்த உபந்யாஸங்கள் எல்லோருடைய மனத்தையும் கவரும்படியாக மிகவும் நன்றாக இருந்தது. ஜஸ்டிஸ் பகவதி, ஜஸ்டிஸ் ஷேலத், பண்டிதகோபாலாசார்யா, ஸ்ரீ. என். ஸி. என். ஆசார்யா, ஸ்ரீ வி எச். கமத், ப்ரஹ்மஸ்வரூப பூரி, ஸ்ரீமதி க்ருஷ்ணதேவிகுஜ்ரால், பண்டிதரத்னப்ரியா முதலிய பெரியோர்களும் ஸ்ரீக்ருஷ்ண குணநிசயங்கள், பரத்வம் முதலியவைகளில் உபந்யஸித்தார்கள். இந்த உத்ஸவம் இவ்வளவு குதூஹலத்துடனும், விமர்சையாகவும் நடந்ததற்குக் காரணம் ஸ்ரீமான் எ. எஸ். அய்யங்கார் ஸ்வாமி எடுத்துக்கொண்ட ச்ரமம்தான்

ஸ்ரீ. உப. ரஸரத்நாகர ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமி 17-11-1950 முதல் 11-12-1950 வரையில் ஸபையின் சார்பில் ஆஸ்திக ஸமாஜ் பண்டபத்தில் ஸ்ரீமத்பாகவத, ராமாயண உபந்யாஸங்கள் செய்தார்.

பட்டாபிஷேக தினத்தன்று 'புராண தத்வ விமர்சந விக்ராந்த' என்னும் பிருது மஹாஜனங்களால் அளிக்கப்பட்டது.

பி. ராமஸ்வாமி என். கேசவன்

கார்யதர்சிகள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

புஸ்தக விமர்சம்

திருப்பாவை நாலாயிரப்படி

திருவல்லிக்கேணி வேதவேதாந்த வர்த்திநீ ஸபையாரின் வெளியீடு. விலை ரூ. 1-0-0 (கிடைக்குமிடம் எ. சேஷாசாரியர் அட்வகேட் 2 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி. சென்னை. 5.)

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையின் ப்ராசீந வ்யாக்யாநங்களுள் இதுவரையில் அச்சில் வெளிவராதிருந்த ஒரு வ்யாக்யாநத்தை அச்சிட்டு வெளியிட்டு ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு இச்சபையார் ஓர் பெரிய உபகாரம் செய்திருக்கிறார்கள். இந்த வ்யாக்யாநகர்த்தா திருநாராயணபுரம் ஆய் என்கிற ஜநந்யாசார்யஸ்வாமி. இவர் ஸ்ரீமணவாளமாமுனிக்கும் முற்பட்டவர் என்று இப்புத்தகத்தின் முகவுரையிலிருந்து தெரிகிறது. ஒவ்வொரு பாட்டிலும் பற்பல விசேஷார்த்தங்களையும் த்வநியையும் வ்யாக்யாதா எடுத்துக்காட்டியிருக்குமழகு ரஸிகர்களால் மிகவும் போற்றத்தக்கதாயிருக்கிறது. திருப்பாவையின் ரஸத்தை யநுபவிக்க ஆசையுடைய ஒவ்வொருவரும் இவ் வ்யாக்யாநத்தைப் பயில வேண்டுவது அவசியம்.

திருப்பாவை—கோதாஸ்துதி மூலமும் உரையும்

(கிடைக்குமிடம் எம். கே. ஸ்ரீநிவாஸய்யங்கார் 16. பேயாழ்வார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5. விலை அணா 4.)

இப்புஸ்தகத்தில் திருப்பாவைக்கு ந்யாய வேதாந்த சிரோமணி கே. வரதாசாரியார் இயற்றிய தெளிவான கருத்துரையும் வ்யாகரண ந்யாய வித்வான் சிரோமணி எ. ஆர். க்ருஷ்ணமாசாரியார் கோதா ஸ்துதிக்கு இயற்றிய ஸரளமான பொழிப்புரையும் யாவரும் படித்து உணர்ந்துகொள்ளும்படி நன்றாய் எழுதப்பட்டுள்ளன. ஒப்புயர்வற்ற இவ்விரண்டு நூல்களையும் யாவரும் வாங்கி அறிந்து அநுபவிக்கும் வகையில் ஒரே புஸ்தகரூபத்தில் குறைந்த விலையில் இப் பதிப்பாசிரியர் வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

1. ஸ்ரீபரமபத ஸோபாநம்

ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்தது. திருவஹீந்த்ரபுரம் வித்வான் மஹாமஹோபாத்யாய பகவத்விஷயம் பண்டித பூஷண சேட்லூர் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் வ்யாக்யாநத்துடன் கூடியது. மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2-8-0

(கிடைக்குமிடங்கள் (1) ஸ்ரீ சேட்லூர் பண்டிட் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்வாமி, திருவஹீந்த்ரபுரம், திருப்பாப்புலியூர்.

(2) ஷை ஸ்வாமி, 2. கோதண்டராமஸ்வாமி கோவில் தெரு, மாம்பலம், மதராஸ்-17.

(3) ஆதிநாராயணஸ்வாமி ரெட்டியார், அனந்த விலாஸ், லக்ஷ்மீபுரம், அமிஞ்சிக்கரை, மதராஸ்.)

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்களுள் ஸ்ரீ பரமபதஸோபாநம் என்னும் ரஹஸ்யம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. 'வ்யாஜீக்ருத்ய விஶுத்தி ஸம்பதுபதீந் ஸோபாநபர்வாணி ந: ஸம்ஸாரார்ணவ நிர்ஜாத ஹ்ருதய: ப்ராதீகலத் ஸத்வர:' என்று இதன் தனியனில் சொல்லியபடியே இந்நூலில் ஸகல வேதாந்த சாஸ்த்ரார்த்தங்களையும் ஸ்வாமி அடக்கி அருளிச்செய்திருக்கிறார். ஒரு ஸுக்ருத விசேஷத்தை வ்யாஜமாகக் கொண்டு ஸர்வேச்வரன் ஒரு ஜீவனுக்கு ஆசார்ய ஸம்பந்தத்தை ஏற்படுத்தி அவனுக்கு சிதசிதீச்வரதத்வ விவேகத்தை உண்டுபண்ணுகிறான். அதனால் அந்த ஜீவன் தான் இவ்வளவு காலமாக இருந்த நிலைமையையும் தான

தான் இருக்கவேண்டிய நிலைமையையும் கண்டு நிர்வேதமடைந்து நிஷித்தகார்யங்களிலிருந்து நிவ்ருத்தனாகிறான். பிறகு க்ஷுத்ர புருஷார்த்தங்களில் விரக்தி தான் நல்வழியில் சேரா விட்டால் நேரக்கூடிய அவஸ்தைகளைக் கண்டு அஞ்சி தனக்கு ஸ்வரூபப்ராப்தமான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யடைவதில் த்வரையுடைய வனாய் தனக்குத் தகுந்ததொரு உபாயத்தை யநுஷ்டித்து ஈச்வரனிடத்தில் பொறுப்பை எற்றிவிட்டு நிர்பரனாயும் நிர்பயனாயுமாகிறான். பின்னர் ஈச்வரன் ஸங்கல்பித்தபடி தேஹாவஸானம்வரையில் இங்கிருந்து தேஹம்முடிந்த பின்னர் கிளம்பி அர்ச்சிராதி மார்க்கத்தால் பரமபதமேறச்சென்று பரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவம் பெறுகிறான். இவ்வாறு ஒரு சேதனன் முமுக்ஷுவாக ஆகி மோக்ஷமடையும் விதத்தை, கீழே இருக்கும் ஒருவன் உயரத்திலுள்ள ஒரு உப்பரிகைக்கு ஒரு படிக்கட்டின் வழியாக எறுவதைப்போல் அமைத்து ஸ்ரீதேசிகன் அழகாக அருளிச் செய்திருக்கிறார். இந்நூல் ஸ்ரீசேட்லூர் ஸ்வாமியின் வ்யாக்யானத்துடன் மூன்றும்பதிப்பாக இப்போது வெளிவந்திருப்பதிலிருந்து வ்யாக்யானத்தின் சிறப்பை நன்குணரலாம். மீட்சியில்லா வாழ்ச்சியை யடைய அனைவரும் ஆதரவுடன் பயிலவேண்டிய க்ரந்தமிது.

*   *   *   *   *

2. ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்.

ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச் செய்தது. காஞ்சீபுரம் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசார்யர் இயற்றிய வ்யாக்யானத்துடன் கூடியது. விலை ரூ 1—8—0. (கிடைக்குமிடம்:—க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.)

பரத்வத்தை யுணர்த்துவதிலும் அதன் அநுபவத்தில் ஆழ்ந்து நிற்பதிலும் ஒப்புயர்வற்றனவாயும் சிறந்த ஆசார்யர்களால் அருளிச் செய்யப்பட்டனவாயுமுள்ள நூல்களையுடைய பெருமை நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கேற்பட்ட ஓர் தனிப்பெருமை. ஸ்ரீஆளவந்தார், கூரத்தாழ்வான், பட்டர், தேசிகன் இவர்கள் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களை வைத்துக்கொண்டு ரஸிகர்கள் காலதத்வமுள்ளளவும் தெவிட்டாமல் பகவத்குணாநுபவம் பண்ணக்கூடுமென்பது மிகையாகாது. அவற்றுள் ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச் செய்த ஸ்தோத்ரங்கள் ஐந்து. ஸ்ரீ வைகுண்டஸ்தவம், அதிமாநுஷஸ்தவம், ஸுந்தரபாஹுஸ்தவம், வரதராஜஸ்தவம், ஸ்ரீஸ்தவம் என்று. அதில் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் ஸ்ரீவைகுண்டநாதனது ஸ்வரூப ரூப குண விபூதிகளை ஆழ்வான் விஸ்தாரமாய் அநுஸந்திக்கிறார். இந்த ஸ்தோத்ரம் 101—ச்லோகங்கள் கொண்டது. ஸ்ரீ அண்ணங்கராசார்யஸ்வாமியின் சிறந்த வ்யாக்யானத்துடன் நன்கு அச்சிடப்பட்டு அந்த ஸ்வமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி நினைவு மாலையின் மூன்றாவது மலராக வெளிவந்திருக்கிறது.

3. திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்க வெளியீடுகள்.

(கிடைக்குமிடம்:— சங்கக்காரியாலயம், 15 கணபதி முதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.)

28. தமிழரேத்தும் ஸ்ரீமணவாள மாமுநிகள்.

இந்நூலில் முன்னோர்களும் நற்றமிழ் புலவர்களும் ஸ்ரீமணவாளமாமுநிகளைப் போற்றியுள்ளவாற்றை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

29. திருச்சின்னமாலை.

இந்நூலில் ஸ்ரீதேசிகனருளிச் செய்த திருச்சின்னமாலை யென்னும் ப்ரபந்தம் குறிப்புரையுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீதேசிகன் இப்படியொரு ப்ரபந்தமருளிச் செய்திருப்பதற்கு மூலம் எது என்பதைப்பற்றியும் பழந்தமிழ் நூல்களில் இதற்கு ஆதாரமுண்டா என்பதைப்பற்றியும் பதிப்பாசிரியர் விரிவாக ஆராய்ந்து எழுதியிருக்கும் கட்டுரை சிறந்து விளங்குகிறது.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸம்பாதகரின் குறிப்புகள்

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

இந்த ஸஞ்சிகையிலிருந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவிற்குப் பத்தாவது ஆண்டு ஆரம்பமாகிறது.

புத்தாண்டு

இப்பத்ரிகைக்குப் பரம க்ருபையுடன் விஷய ப்ரதானம் செய்து உபகரித்த பண்டிதர்களுக்கும் இதை அன்புடன் ஆதரித்துவரும் நமது வாசக மஹாசயர்களுக்கும் நாம் மிகவும் க்ருதஜ்ஞர்களாயிருக்கிறோம். ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹத்தால் இப்பத்ரிகை இன்னும் மேன்மேலும் சிறப்புற்று விளங்குமாறு ஸர்வேச்வரன் அருள்புரிய வேணும்.

* * * *

புது வருஷத்தைப் பற்பல புதுத் தீர்மானங்களுடன் தொடங்குவதென்பது ஒரு புதுப் பழக்கம். நாமும் முன்பு பல ஸமயங்களில் தெரிவித்துக் கொண்டிருக்கும் நோக்கங்கள் நன்கு ஈடேறும்வண்ணம் இப் பத்ரிகையை நடத்துவதென்ற உறுதியுடன் இவ்வருஷத்தைத் தொடங்குகிறோம். நமது தீர்மானம் வெறும் புதுவருஷத் தீர்மானமாக மட்டும் ஆகிவிடாமல் கார்யத்தில் நிறைவேற்றப்பட்டு ஸபலமாகும்படி நம்முடன் பூர்ணமாய் ஒத்துழைக்க வேண்டுமென்று வித்வான்கள் ஸந்நிதியில் ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

* * * *

நமது வாசக மஹாசயர்களுக்குத் தனித்து ஓர் விண்ணப்பம் செய்து கொள்ள விரும்புகிறோம். ஒவ்வொரு சந்தாதாரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகை வந்தவுடன் அதை முழுதும் படித்து நாம் முன்பு இருந்ததைவிட இதைப்படித்தபின் ஸம்ப்ரதாய விஷயத்தைப் பற்றி உபயோகமுள்ளதாய் கொஞ்சம் தெரிந்துகொண்டோம். இதைப் படித்ததில் நாம் காலத்தை வீணாக்கவில்லை என்ற த்ருப்தி அடைந்தார்களாகில் பத்ரிகையை நடத்துபவர்களுக்கு அதைக்காட்டிலும் த்ருப்தியளிக்கக்கூடிய விஷயம் வேறில்லை. அப்படி அவர்கள் த்ருப்தி யடைவதற்கு வேண்டியதைச் செய்வதில் நமக்குள்ள முழுப் பொறுப்பையும் நாம் உணர்ந்திருக்கிறோம். அதற்கு அவச்யமானவைகளைச் செய்துகொண்டு வருகிறோம். ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் வெளிவரும் சில வ்யாஸங்கள் சில வாசகர்களுக்கு எளிதில் புரியாதபடி சற்று கடினமாயிருக்கக்கூடும். இந்தக் காடின்யம் (கடினமாயிருக்கும் தன்மை) பெரும்பாலும் அவ் வ்யாஸத்தில் சொல்லப்படும் விஷயத்தின் துரூஹமாயிருக்குந் தன்மையால் ஏற்பட்டிருக்கலாம். எனினும் அவ்வாசகர்கள் வ்யாஸங்களெல்லாவற்றையும் விடாமல் முழுதும் வாசிக்கவேண்டுமென வேண்டிக் கொள்கிறோம். நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் பல க்ரந்தங்கள் அழகிய உயர்ந்த மணிப்ரவாள நடையில் அமைந்திருக்கின்றன. அவற்றின் அழகை அநுபவிப்பதற்கு இம்மாதிரி ரீதியில் அமைந்திருக்கும் வ்யாஸங்களில் பரிசயம் இருத்தல் நலம். தண்ணீரில் இறங்கினால்தான் நீந்தக் கற்றுக் கொள்ள முடியும். ‘ நீந்தத்தெரிந்தால்தான் தண்ணீரில் இறங்குவேன் ’ என்று ஒருவன் இருந்தால் அவ்

னுக்கு நீந்துவதில் பரிசயம் ஏற்படாது. ஆகையால் முதலில் சற்று புரியாவிட்டாலும் அவர்கள் விடாமல் எல்லா வ்யாஸங்களையும் படிப்பதென்று வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால் தெளிவடைவில் மணிப்ரவாள நடையிலும் பூர்வாசார்ய க்ரந்தங்களிலும் ஒரு வ்யுத்பத்தி அல்லது பரிசயம் ஏற்படுவதை அவர்கள் நன்றாகக் காணலாம். நாமும் முன் தெரிவித்துக் கொண்டபடி கூடியவரையில் வ்யாஸங்கள் ஸரளமாயிருப்பதற்கு வேண்டியதைச் செய்கிறோம். எனவே வ்யாஸங்களை விடாமல் கூர்ந்து முழுதும் படிப்பது என்ற தீர்மானமே நமது வாசகர்கள் ஒவ்வொருவரும் இப் புதுவருஷ ஆரம்பத்தில் செய்துகொள்ளும் முதல் தீர்மானமாயிருக்க வேண்டுமென்பது நமது ப்ரார்த்தனை.

* * * *

சில சந்தாதார்கள் இரண்டாவதாக இன்னுமொரு தீர்மானம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம். சந்தாவை பாக்கியில்லாமல் உடனே அனுப்பி வைப்பதென்பதைப் பற்றியதுதான் அது. சென்ற சில மாதங்களில் அதிக பாக்கியுள்ள சந்தாதார்களுக்கு அவர்கள்பாக்கி இவ்வளவென்று தெரிவித்து பாக்கியை சீக்கிரத்தில் அனுப்பி வைக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டிருந்தோம். பலர் பாக்கியை க்ருபையுடன் அனுப்பி வருகிறார்கள். இன்னும் பலர் அம்மாதிரி செய்ய முன்வரவில்லையென்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டி யிருக்கிறது. அவர்களும் உடனே பாக்கியை அனுப்பிவைக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். பாக்கி விபரம் ஏற்கனவே அவர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

* * * *

நாம் சந்தாதார்களுக்கு எழுதியனுப்பும் விலாஸங்களில் ஏதாவது தவறுதல் இருந்தால் அதை எப்படித் திருத்திக் கொள்ள வேண்டுமோ அப்படி அதை எமக்கு சுட்டிக் காட்டி எழுதி யனுப்பும்படியும், விலாஸ மாறுதலிருந்தால் அதையும் தெரிவிக்கும் படியும் சில மாதங்களுக்குமுன் சந்தாதார்களைக் கேட்டுக் கொண்டிருந்தோம். வெகுசில சந்தாதார்களே அவ் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தபடியால் புதிதாகத் திருத்தப்பட்ட சந்தாதார் விலாஸத்தை அச்சிடுவது தாமதிக்க நேர்ந்திருக்கிறது. ஆகவே ஒவ்வொரு சந்தாதாரரும் இந்த ஸஞ்சிகை தமக்குக் கிடைத்ததும் இதன் வெளிப்புறம் சுற்றுத் தாளில் எழுதிவரும் மேல்விலாஸம், (இனிஷியல், பெயர், ஊர், தபாலாபீஸ் பெயர் இவைகள்) ஸந்தேஹத்திற்கு இடமில்லாதபடி எழுதப் பட்டிருக்கிறதா என்று பார்த்து, அதில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டியிருந்தால் அதை உடனேயே எமக்கு அறிவிக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம். தபால் பட்வாடா ஸௌகர்யத்தையுத்தேசித்து விலாஸங்கள் இங்கிலீஷில் அச்சிடப் பெறுவதால் ஸௌகர்யப் பட்டால் சந்தாதாரர்கள் விலாஸத்தில் செய்ய வேண்டிய மாறுதல்களை இங்கிலீஷில் பெரிய எழுத்தில் (BLOCK LETTER) எழுதி யனுப்பினால் நலம். ஸௌகர்ய மில்லாதவர்கள் தமிழிலேயே அனுப்பலாம். கடிதம் எழுதும் போது மறவாமல் சந்தா இலக்கத்தைக் குறிப்பிடவேணும்.

* * * *

ஒவ்வொரு சந்தாதாரும் இவ் வருஷத்தில் குறைந்தபக்ஷம் ஒரு புதிய சந்தாதாரையாவது சேர்த்துக் கொடுப்பதென்று மற்றொரு புது வருஷத் தீர்மானம் செய்துகொண்டு அதை நிறைவேற்றினால் அதனால் ஆஸ்திக்யத்திற்கேற்படும் செழிப்பை நினைக்கும்போது நம் மனம் மிகவும் பூரிக்கிறது. ஸ்ரீ சரண்யனின் ஸங்கல்பம் அதற்கு அநுகூலமாயிருக்குமென்று நம்புகிறோம்.

* * * *

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

———:o:———

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

“ ஸ்ரீராமாநுஜன் ”

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

..........*..........

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத் தனிப்பட்ட
சந்தா செலுத்தவேண்டியதில்லை. மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.

தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

==o==

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்க ளருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

Regd. No. M. 4437.

'SRI KRISHNA'

A Cultural monthly devoted to religious and philosophical matters and reviewing the events of the world from a spiritual point of view.

If you look for chaste method, mould, motive and substance in YOUR magazine,

SUBSCRIBE TO SRI KRISHNA :

		Annual	Monthly
High-School Students	Rs.	3.	
College Students		4.	
Non-Student Adults		5.	0-8-0
Reading-rooms and Libraries		10.	1-0-0
For those who compete for prize-essays or crossword puzzles in the magazine		15.	1-8-0

To influence the influential in Asia and abroad,

ADVERTISE IN SRI KRISHNA :

	Half Page	Full Page
Monthly	Rs. 30.	Rs. 45.
Quarterly	80.	115.
Half Yearly	150.	200.
Yearly	250.	350.

For special positions apply to the BUSINESS MANAGER.

Special commission for those who canvass subscribers (12½%) and advertisers (10%)

Editors:

PUDUKKOTTAI,
A S. RAGHAVAN.

BOMBAY,
S. NARAYAN,
1, BHAUDAJI ROAD, MATUNGA.

EVERYBODY READS IT

Apply to :—The Business Manager,
"SRI KRISHNA" EAST III, STREET, PUDUKOTTAI, [S. INDIA]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ப்ரதி இங்கிலீஷ் மாதம் 15-ம் தேதி சந்தாதாரர்களுக்குத் தபாலில் போடப்படுகிறது. ஒவ்வொரு சந்தாதாருக்கும் ஸஞ்சிகை அனுப்பப் படுகிறதா என்று பார்ப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் சில சந்தாதாரர்களிட மிருந்து ஸஞ்சிகை கிடைக்கவில்லை யென்று கடிதங்கள் வருகின்றன. ப்ரதி இங்கிலீஷ் மாதம் 20-ம் தேதிக்குள் ஸஞ்சிகை கிடைக்காவிட்டால் உடனே சந்தாதாரர்கள் அந்த விஷயத்தைத் தெரிவித்தால் வேறு ஸஞ்சிகை அதற்கடுத்தபாத ஸஞ்சிகையுடன் அனுப்பப்படும். விலாஸ மாறுதல்களை உடனுக்குடன் தெரிவிக்காத காரணத்தால் ஸஞ்சிகை கிடைக்காவிடில் அதற்கு பதில் ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.